
செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

மாயூரம்-வேதநாயகம்





NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-6-4

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/11-%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%82%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%B5%E0%AF%87%E0%AE%A4%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

மாயூரம்-வேதநாயகம் *(1826 - 1889)*



அறிமுகம்

தமிழ் உரைநடையை வளம் பெறச் செய்த முன்னோடிகளில் தலை சிறந்தவராகக் கருதப்படும் மாயூரம் வேதநாயகம் பிள்ளை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குளத்தூரில் 1826-ம் ஆண்டு பிறந்தார்.

இவர் தமிழ்நாட்டில் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளர், பதிவாளராகப் பணியாற்றினார். பின்னர் மாயூரம் மாவட்ட முன்சீஃபாக 13 ஆண்டுகள் பணி புரிந்தார். அதனால் மாயூரம் வேதநாயம் பிள்ளை என்று அழைக்கப்பட்டார்.

தமிழ்/சமுதாயப் பணி

- சதர்ன் கோர்ட் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர்.
- மாயவரத்தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இது தமிழகத்தில் பெண்களுக்காக தொடங்கப்பட்ட முதல் பள்ளி.

- இவரது கட்டுரைகள், பெண் கல்வி, தாய்மொழிப் பற்று, ஒற்றுமை உணர்வு, புதிய சிந்தனைகள், நீதி நெறிகள் என பல கருப்பொருளை கொண்டவை.
- 1876-1878 ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின்போது தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார்.

படைப்புகள்

- 1879-இல் எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரம் என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம்.
- சுகுண சுந்தரி என்ற நாவலையும், பெண்கல்வி, பெண் மானம், பெண்மதி மாலை என்ற உரைநடை நூலையும் எழுதியுள்ளார்.
- இவர் பிறப்பால் கிறிஸ்தவராயினும் வடலூர் இராமலிங்க அடிகளாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அவரது சன்மார்க்க நெறிகளை பரப்பும் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை'களைப் பாடினார்.

மொழிபெயர்ப்பு

- கி.பி1805 முதல் கி.பி. 1861-ஆம் ஆண்டு அதாவது 56 ஆண்டுகள் வரை ஆங்கில மொழியில் இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புகளைத் தமிழில் மொழி பெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக 1862-இல் வெளிட்டார்.

விருதுகள் / சிறப்புகள்

- *மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை* இவரை தனது 'சீர்காழிக் கோவை' நூலில் 'குளத்தூர் வேதநாயகன் கோவை' என புகழ்ந்து பாடியுள்ளார்.
  கோபால கிருட்டின பாரதி இவரது நட்பை பெருமை படுத்தும் விதமாக 'ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆமோ?' என்று தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

நீதித்துறை வாழ்க்கை

முதலில் தென்மாநில நீதிமன்றத்தில் (ஸதர்ன் கோர்ட்) ஆவணக் காப்பாளராகப் பணியில் சேர்ந்தார். பின்னர் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்து அந்தப் பதவியில் நியமனமானார்.

இஸ்லாமிய ஆட்சிக் காலத்தில் காசியார்கள் குற்றங்களை விசாரித்து நீதி வழங்கும் முறை இருந்தது. அதன் தொடர்ச்சியாக ஆங்கிலேயர் காலத்தில் மாவட்ட நீதி மன்றத்தில் குற்ற வழக்குகள் விசாரணை நடக்கும்போது 'காசியார் பத்வாக்' என்றழைக்கப்பட்ட வழக்கு தொடர்பான காசியார் தீர்ப்பு ஆங்கிலேய நீதிபதியின் கருத்தில் இருந்து மாறுபட்டால் அவற்றை மொழிபெயர்த்து தென்மாநில நீதிமன்ற முடிவுக்கு அனுப்பிவிடுவார்கள். அந்த வேலையில் வேதநாயகம் பிள்ளை இருந்தார். அப்போது அங்கு நீதிபதியாக இருந்த மேஸ்தர் டேவிட்சன் என்பவர் மாற்றலாகிப் போகும்போது அவருடைய ஒப்புதலுக்காக வேதநாயகம் பிள்ளை வைத்த மொழிபெயர்ப்புகளை அவரால் பார்வையிட இயலவில்லை. அவற்றை பார்வையிடத் தன்னுடன் எடுத்துச் சென்ற டேவிட்சன் சென்ற இடத்தில் நோய்வாய்ப்பட்டுக் காலமானார். அத்தகைய வழக்குகளின் மொழிபெயர்ப்புகளை உரிய நேரத்தில் அனுப்பவில்லை என தென்மாநில நீதிமன்றத்தில் இருந்து விசாரணை வந்தது.

அப்போதிருந்த மாவட்ட நீதிபதி மேஸ்தர் கிரீன்வே சரியாக விசாரணை செய்யாமல் மொழிபெயர்ப்புகளை அனுப்பாதது வேதநாயகம் பிள்ளையின் தவறு என்றும் அவரை வேலை நீக்கம் செய்துவிட்டதாகவும் பதில் எழுதிவிட்டார். நடந்த விவரங்களைத் தென்மாநில நீதிமன்றத்திற்கு விரிவாக எழுதியனுப்பி தண்டனையை ரத்து செய்யுமாறு வேதநாயகம் பிள்ளை கோரிக்க வைத்தார். பல மாதங்களாகியும் அது விசாரிக்கப்படாமல் அவர் வேலை நீக்கத்தில் இருந்ததால் கவலையில் நோய்வாய்ப்பட்டிருந்தார். பிறகு மறைந்த மேஸ்தர் டேவிட்சன் பெட்டியில் அந்த மொழிபெயர்ப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர் வேலையில் சேர உத்தரவு வந்தது. இடைக்காலத்தில் அவரது பணியை பார்த்து வந்தவர் வேதநாயகம் நோய்வாய்ப்பட்டு விட்டதால் வேலை செய்யும் நிலையில் இல்லை என்று எழுதி அனுப்பிவிட்டார். அதை மறுத்து எழுதி மீண்டும் நீதித்துறைப் பணியில் சேர்ந்தார்.

பின்னர் 1857-ம் ஆண்டு தரங்கம்பாடி நீதிமன்றத்தில் முன்சீஃப் பதவியில் சேர்ந்தார். அதன் பின்பு 1860-ல் மாயூரம் மாவட்ட முன்சீஃபாக சேர்ந்து 13 ஆண்டுகள் தொடர்ந்து அங்கு பணிபுரிந்ததால், இவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை என்றே அழைக்கப்பட்டார் (தற்போது மாயூரம்/மாயவரம் மயிலாடுதுறை என்றழைக்கப்படுகிறது). 1872-ம் ஆண்டு பணியிடத்தில் மேலும் சில இன்னல்களுக்குப் பிறகு ஓய்வுபெற்றார். நீதிமன்றப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் மாயவரம் நகர்மன்றத் தலைவராக பதவியேற்றார்.

நீதிமன்றத்தில் அப்போது நிலவிய பல சீர்கேடுகளையும் அநீதிகளையும் தனது படைப்புகளில் சித்தரித்திருக்கிறார்.

இலக்கிய வாழ்க்கை

தன் சொந்த கிராமத்தில் தொடக்க கல்வி கற்ற பிறகு, இவரது தாய்வழி பாட்டனார் ஆங்கிலேயப் பணியில் இருந்தமையால் வேதநாயகம் பிள்ளைக்கு ஆங்கிலக் கல்வி அளிக்க பெற்றோர் முடிவெடுத்து அவரைத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி வைத்தனர். அங்கே ஆங்கில இலக்கியப் படைப்புகளுக்கும் கட்டுரைகளுக்கும் அவருக்கு அறிமுகம் உண்டானதால், அது போன்ற படைப்புகளைத் தமிழில் எழுதவேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. அதுவே பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நாவலை எழுத அவருக்குத் தூண்டுகோலாயிற்று.

பிரதாப முதலியார் சரித்திரத்துக்கு அவர் எழுதிய முன்னுரையில் "தமிழில் உரைநடை நூல்கள் இல்லையென்பதை ஒப்புக்கொள்கிறார்கள். இந்தக் குறைபாட்டைப் பற்றி எல்லோரும் வருந்துகின்றனர். இந்தக் குறையை நீக்கும் நோக்கத்துடன்தான் இந்தக் கற்பனை நூலை எழுத முன்வந்தேன். மேலும் நீதிநூல், பெண்மதி மாலை, சர்வ சமய சமரசக் கீர்த்தனம் முதலிய முன்பே வெளிவந்த என் நூல்களில் குறிப்பிட்டுள்ள அறநெறிக் கொள்கைகளுக்கு உதாரணம் காட்டவும் இந்த நாவலை எழுதலானேன்." என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதாப முதலியார் சரித்திரம் வெளியானதும் அதன் புதுமை காரணமாக தமிழ் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் தமிழுக்கு இது மிகப் பெரிய தொண்டு என்று பாராட்டினார்கள். இதனால் ஊக்கம் கொண்டு சுகுணசுந்தரி என்ற பெயரில் அடுத்த நாவலை எழுதினார். இது பக்க அளவில் பிரதாப முதலியார் சரித்திரத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவுதான் இருந்தது. அந்நாவலின் முன்னுரையில் இந்நாவலின் மூலம் மனித இயல்பின் பல்வேறு கோணங்களையும் பல்வேறு தர்ம நீதிக் கொள்கைகளையும், இளவயதில் திருமணம் செய்வது போன்ற சமூகப் பழக்கங்களின் தீமைகளையும் எடுத்துக்காட்டியுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

வேதநாயகம் பிள்ளை இளமை முதலே தமிழில் செய்யுள் இயற்றும் திறம் பெற்றிருந்தார். நீதிநூல் என்ற செய்யுள் வடிவில் அமைந்த நூல் ஒன்றையும் சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் என்னும் இசைப்பாடல் தொகுப்பையும் இவர் எழுதியிருக்கிறார். பல தனிப்பாடல்களும் இயற்றியிருக்கிறார்.

திருச்சிராப்பள்ளி மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை, இராமலிங்க வள்ளலார், கோபாலகிருஷ்ண பாரதியார் மற்றும் தமிழ்ப் புலமை மிக்க திருவாவடுதுறை ஆதீனத்தின் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஆகியோருடன் இவருக்கு நெருங்கிய நட்பு இருந்தது. திருவாவடுதுறை மகாசன்னிதானம் அவர்களுடன் தாங்கள் இயற்றும் வெண்பாக்கள் வழியாக உரையாடிக் கொள்ளும் நட்பு கொண்டிருந்தார்.

பிற ஆக்கங்கள்

திருச்சி நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய போது 1805 முதல் 1861 வரையிலான ஐம்பத்தாறு வருடங்கள் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து "சித்தாந்த சங்கிரகம்" என்ற நூலை வெளியிட்டார். 1862, 1863-ம் ஆண்டு வெளிவந்த தீர்ப்புகளையும் அதே போல தொகுத்து 1864-ம் ஆண்டு வெளியிட்டார். நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்ப்பு செய்த பெருமைக்குரியவரும் இவரே. அதற்கு முன்னர் இத்தகைய சட்ட நுணுக்க நூல்கள் தமிழில் இல்லை.

இவர் பெருமளவில் கர்நாடக இசைப்பாடல்களையும் எழுதியுள்ளார். இவரது பாடல்கள் கச்சேரிகளில் கர்நாடக இசைப்பாடகர்கள் மத்தியில் இன்னும் பிரபலமான தேர்வாக உள்ளன. கர்நாடக இசைப் பாடகரான சஞ்சய் சுப்பிரமணியம் வேதநாயகம் பிள்ளையின் பாடல்களை மட்டும் பாடி ஒரு கச்சேரி நிகழ்த்தியிருக்கிறார்.

வேதநாயகம் பிள்ளையின் தமிழ்ப் பாடல்களில் வடமொழிச் சொற்கள் மிகுதியாக உள்ளன. தியாகராஜரின் "நிதிசால சுகமா" வைப் போல தமிழில் "மானம் பெரிதா, வருமானம் பெரிதா?" என்னும் பாடலை இயற்றியிருக்கிறார். "நாளே நல்ல நல்ல நாள்", "நீ மலைக்காதே நெஞ்சே", "தருணம், தருணம்..." போன்றவை இவர் இயற்றிய பிரபலமான பாடல்கள். அவரது இசைப்பாடல்களில் ஒன்றான நாயகர் பக்ஷமடி (ராகமாலிகா - சாமா / சண்முகப்ரியா / கேதார கவுளை), 1955-ம் ஆண்டு வெளிவந்த தமிழ் திரைப்படமான டாக்டர் சாவித்திரியில் ஒரு நடனக் காட்சிக்காக சேர்க்கப்பட்டது.

அந்தக் காலத்தில் கிறிஸ்தவ வழிபாட்டுப் பாடல்கள், கிரேக்கம், லத்தீன் மற்றும் ஆங்கில மொழிகளிலேயே இருந்தன. தமிழிலேயே அத்தகைய பாடல்கள் இருந்தால் தமிழ் கிறிஸ்தவர்கள் அனைவரும் புரிந்துகொண்டு பாட முடியும் என்றெண்ணி, திருவருள்மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, தேவ தோத்திர மாலை, பெரியநாயகி அம்மைப் பதிகம் போன்ற படைப்புகளை எழுதினார்.

விவாதங்கள்

வேதநாயகம் பிள்ளையால் அந்தக் கால இயல்புக்கேற்ற தமிழ்நடையில் எழுதப்பட்டிருந்த பிரதாப முதலியார் சரித்திரம் நாவலை 1948-ல் தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம் வெளியிட்ட பதிப்பில் வடமொழி சொற்கள் அனைத்தும் தமிழாக்கம் செய்யப்பட்டு முற்றிலும் மாற்றி வெளியிட்டது. இச்செயல் பின்னர் தமிழ் எழுத்தாளர்களின் கடும் கண்டனத்துக்கு உள்ளானது. க.நா.சு இதனை 'வன்முறைச் செயல்' என்று குறிப்பிட்டுக் கண்டிதிருக்கிறார். இவ்விதம் ஆசிரியருக்கு இழைக்கப்பட்ட அநீதியை சீர்செய்யும் விதமாக சக்தி காரியாலயம் 1957-ல் மீண்டும் மாற்றமில்லாத முழுப் பிரதியை வெளியிட்டது.

தமிழ் நாவலின்
தோற்றமும் வளர்ச்சியும்

(பல்கலைக் கழகச்சொற்பொழிவுகள்)

ஆற்றியவர் :

கி.வா.ஜகந்நாதன்

கமிழ்உறவு

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்

2/96 பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை- 5

https://upload.wikimedia.org/wikipedia/commons/2/21/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D_%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%A4%E0%AF%8B%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%AE%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%B3%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%AF%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D.pdf

பதிப்புரை

எழுத்தாளர்களின் நன்மைக்காக எழுத்தாளர்களின் கூட்டுறவு முயற்சியால் நடைபெற்று வருவது தமிழ எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம். தமிழுறவு என்ற முத்திரையுடன் இன்று வரை 89 நூல்களை வெளியிட்டிருக்கிறது. 23- ஆவது வெளி யீடான இது இப்போது இரண்டாம் பதிப்பாக வருகிறது. தரமான நூல்களை நல்ல முறையில் வெளியிட்டுப் புதிய தமிழிலக்கியப் பரப்புக்கு அணி செய்ய வேண்டும் என்றும், விற்பனையில் வரும் ஊதியத்தில் பெரும் பங்கினை எழுத்தாளர் பெற வேண்டும் என்றும் எண்ணியே இந்தச் சங்கம் பணி புரிகிறது. புத்தகம் வெளியிடத் தொடங்கியது முதல் இதற்குப் பல துறைகளிலிருந்தும் நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது . முக்கியமாக அரசியலாரும், கூட்டுறவுப் பகுதி யினரும்,நூல் நிலைய அதிகாரிகளும் அளிக்கும் ஆதரவை நான்றியறிவுடன் பாராட்டுகிறோம். இன்னும் போதிய அளவுக்கு ஆதரவு கிடைக்கு மாயின் பன்மடங்கு சிறப்பான வகையில் இந்தத் தொண்டைஆற்ற முடியும் என்ற ஊக்க மும் நம்பிக்கையும் இப்போது உண்டாகியுள்ளன. ஒரு பதிப்புக்கு இரண்டாயிரம் படிகள் வெளியிட்டு அவற்றை ஓராண்டுக்குள் விற்றுவிட வேண்டும் என்பது எங்கள் அவா. இது நிறைவேற முடியாத பேராசை அன்று. நூல் நிலையங்களும் கல்வி நிறுவனங்களும் இந்த வெளியீடு களை வாங்கி ஆதரித்தால் இந்த அவா நிறைவேறும். கூட்டுறவுத் துறையினரும் அரசாங்கமும் எங்களுக்கு இன்னும் மிகுதியான ஆதரவைத் தருவார்கள் என்று எதிர் பார்க்கிறோம். எங்கள் முயற்சியை ஆதரிக்கும் யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சென்னை-57 25-3-77 S தமிழுறவாளர்

முதற்பதிப்பின் முன்னுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் ஆண்டு தோறும் நடைபெறும் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சொற்பொழிவு, வரிசையில் 1963- 64-ஆம் ஆண்டுக்குரிய சொற்பொழிவை நிகழ்த்தும்படி பல்கலைக் கழகத்தினர் என்னைப் பணித்தார்கள். வளர்ந்துவரும் புதிய இலக்கியப் படைப்புக்களைப் பற்றிய சொற்பொழிவாக இருக்கவேண்டும் என்பது இந்த அமைப்பின் நோக்கம். ஆகவே நான் 'தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்'

என்பது பற்றிப் பேசுவதாக ஒப்புக்கொண்டேன். 1954-ஆம் ஆண்டு ஜாவை மாதம் 13.14,15-ஆம்தேதிகளில் இந்தச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. மூன்று நாளும் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் துறைத்தலைவர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமை தாங்கினார். இறுதி நாளில் இந்தச் சொற்பொழிவுகளைப் பாராட்டிப் பேசினார். இந்தச் சொற்பொழிவுகளை ஆற்ற வாய்ப்பு அளித்த சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கு என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன். சொற்பொழிவு களுக்குத் தலைமை தாங்கிப் பாராட்டிய டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கும் என் நன்றியறிவு உரியது. இந்தச் சொற்பொழிவை நடத்துவதற்கு மூலதனம் வழங்கியவர்கள் 'கல்கி' காரியாலயத்தார். கல்கியின் நினைவைப் பசுமையாக வைத்திருக்க இந்தச் சொற்பொழிவு வரிசை உதவும் என்று இதனை அமைத்த அவர்களுக்குத் தமிழ் மக்கள் நன்றி பாராட்ட வேண்டும். வளர்ந்துவரும் தமிழ் இலக்கியத் துறைகளுக்கு வழி வகுத்த பல அறிஞர்களில் கல்கியின் பங்கு மிகப் பெரியது. ஆனந்த விகடனுக்கு ஆசிரியராக இருந்தபோதும், பிறகு தாமே தொடங்கிய கல்கிக்கு ஆசிரியராக இருந்தபோதும் அவர் தமிழுக்காக ஆற்றிய பணி வரலாற்றில் இடம் பெறற் V குரியது. தமிழில் எதனையும் தெளிவாகவும் சுவையாகவும் எழுதலாம் என்று காட்டினார் கல்கி. சிறுகதைகளையும், நகைச்சுவைச் சித்திரங்களையும், கலை விமரிசனங்களையும், அரசியல் கட்டுரைகளையும், வேறு பலவகைக் கட்டுரை களையும், நாவல்களையும், எழுதி எழுதிக் குவித்தார் அவர். கல்கிப் பத்திரிகையின் ஆரம்ப காலங்களில் ஒவ்வோர் இதழிலும் பல வேறு தலைப்பில் பல வேறு கட்டுரைகளை எழுதி முக்கால் பத்திரிகையை நிரப்ப வேண்டிய அவசியம் அவருக்கு நேர்ந்தது. சிறிதும் சளைக்காமல் அதைச் செய்தார். எதை எழுதினாலும் பளிச்சென்று தெளிவாக விளங்கும் நடையில் எழுதினார்; ஆவலைத் தூண்டும் வகையில் எழுதினார்; சுவைத்துப் படிக்கும்படி எழுதினார். அந்தக் காலத்தில் தமிழ்ப்புத்தகங்களை ஆங்கிலம் அறிந்தவர்கள் படிப்பதில்லை. மற்றவர்களிலும் சிலரே படிப்பார்கள். கல்கி பேனாப் பிடித்து எழுதத் தொடங்கிய பிறகு அடுப்பங்கரை முதல் அலுவலகங்கள் வரையில் அவருடைய எழுத்துப் புகுந்தது. ஆங்கிலப்பட்டதாரிகளும் பெரிய வேலையில் இருந்த அதிகாரி களுங்கூட அவர் எழுதியவற்றைப் படித்து அவற்றைப்பற்றி

உரையாடத் தொடங்கினார்கள். அவருடைய தொடர் கதைகளைப் பற்றிய விமரிசனப் பேச்சுக்கள் வீடுதோறும் எழுந்தன. இந்த அற்புதத்தைக் கல்கி செய்துதனால் தமிழ் நாட்டு மக்களுக்கும் பத்திரிகை படிக்கும் ஆர்வம் மிகுதியாயிற்று. இன்று பத்திரிகைகள் லட்சம், இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று தமிழ்நாட்டில் செலவாகின்றன என்றால் அதற்கு அடிக்கல் நாட்டியவர் கல்கி என்பதைச் சிறிதும் தடையின்றிச்சொல்லலாம். எதையும் தாம் நன்றகப் புரிந்துகொண்டு, யாருக்குச் சொல்கிறோமோ அவர்கள் மனநிலையையும் புரிந்து கொண்டு அவர்கள் உளங்கொள்ளும் வகையில் எழுதும் உத்தி கைவரப் பெற்றவர் கல்கி. சங்கீத விமரிசனத்தைத் தமிழில் அவர் தாம் தொடங்கி வைத்தார். 'கர்நாடகம்' என்ற vi பெயரில் அவர் எழுதிய விமரிசனங்களைப் பொதுமக்கள் படித்துச் சுவைத்தது பெரிதன்று; சங்கீத வித்துவான்களே" போற்றிப் பாராட்டினார்கள். கல்கியினால் புகழ் பெற வேண்டும்.அவருடைய விமரிசனத்தில் தமக்கு நல்லபெயர் கிடைக்க வேண்டும் என்று சில சங்கீத வித்துவான்கள் தவம் கிடந்தார்கள். பெரிய புள்ளிகளைப் பற்றிய சித்திரங்கள் அவருடைய எழுத்தில் வண்ணமும் வடிமும் பெற்று மலர்ந்தன. தொடர்கதையை எவ்வளவு நீளமாக எழுதினா லும் வாரந்தோறும் அதை எதிர்பார்த்துப் படித்து இன்புற்றார்கள் வாசகர்கள். சரித்திர நாவல்களைப் படைப் பதிலும் அவரே முதல் புகழைக் கட்டிக் கொண்டார் பொன்னியின் செல்வ'னைப்போன்ற பிரம்மாண்டமான நாவல்களை எழுத அவருடைய சிந்தனையும் கற்பனையும் ஆழமாகவும் அகலமாகவும் உயரமாகவும் அமைந்திருந்தன. தேசீயப் போராட்ட காலத்தில் அவருடைய எழுத் துக்கள் மக்களுக்கு உணர்ச்சியையூட்ட எத்துணை பயன் பட்டன என்பதை அக்காலத்தவர்கள் நன்கு அறிவார்கள். நூறு சொற்பொழிவுகளால் ஆகாத காரியத்தை அவருடைய தலையங்கம் ஒன்று செய்துவிடும். பொதுவாக வளர்ந்துவரும் உரை நடை இலக்கியத்தில் அவர் ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்தார் என்று சொல்லி: விடலாம். பத்திரிகைகளை நடத்துவதிலும்,தமிழுரை நடை யைத் தெளிவும் சுவையும் உடையதாக்குவதிலும், தமிழில் பல புதிய துறைகளைப்புகுத்துவதிலும், தம்மைப் பின்பற்றிப் பல எழுத்தாளர்கள் உருவாகும்படி செய்வதிலும் அவர் இணையற்றவராக விளங்கினார். இத்தகைய ஒருவருடைய பெயரால்

இந்தச் சொற் பொழிவு வரிசையை அமைத்த கல்கி காரியாலயத்தார் நல்ல பொருத்தமான காரியத்தையே செய்திருக்கிறார்கள். பல்கக்ை◌கழக அரங்கில் புதிய தமிழுக்கும் வரவேற்பு உண்டு. என்ற நம்பிக்கையை இதனால் தமிழ் எழுத்தாளர்கள் பெறுவார்கள். vii 'கல்கிரயோடு பழகிய நண்பர்களில் நானும் ஒருவன். அவர் ஆனந்த விகடனில் முறையாக ஆசிரியராகப் பணி யாற்றத் தொடங்கிய பழங்காலத்தொட்டே அவருடன் உறவாடும் பேறு எனக்குக் கிடைத்தது. என்னுடைய ஆசிரியப்பிரானாகிய டாக்டர் மகாமகோபாத்தியாய ஐயரவர் களுக்கு அவரை அறிமுகப்படுத்தும் நல்வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இப்போது அவருடைய நினைவுச் சொற் பொழிவை ஆற்றும் செவ்வி கிடைத்தது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சொற்பொழிவுகளில் முதல் நாள்பேச்சில் பொது வாகத் தமிழ் நாவல்களின் தோற்றத்தையும் பிறகு அவை வளர்ந்து வந்த வகையையும் ஆராய்ந்திருக்கிறேன். இரண்டாம் நாள் பேச்சில் பழைய நாவல்கள் மூன்றைப் பற்றிய ஆராய்ச்சியைக் காணலாம். மூன்றாம் நாள்சொற் பொழிவில் கல்கியின் நாவல்களைப் பற்றிப் பேச வேண்டும் என்பது என் விருப்பம்; அவர் எழுதிய நாவல்கள் எல்லாவற் றையும் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவதானால் அது மிகமிக விரிந்து செல்லும். ஆகவே சரித்திர நாவலுக்காகச் சிவகாமியின் சபத 'த்தையும், சமூக நாவலுக்காக அலையோசை'யையும் ஆராய்ந்து என் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். 'சிவகாமியின் சபதம்' நாடக மேடை ஏறிப் பெரும் புகழ் பெற்றதென்பதையும் 'அலையோசை. சாகித்திய காதமியாரின் ஐயாயிர ரூபாய்ப் பரிசு பெற்று தென்பதையும் தமிழ் மக்கள் அறிவார்கள். 'அலையோசை. தாம் எழுதிய நாவல்களில் நிலைத்து நிற்பதற்குரியது என்று அதன் ஆசிரியரே நம்பிக்கை பூண்டிருந்தார்; இதனை அவரே எழுதியிருக்கிறார். தமிழ் நாவல்களைப் பற்றிய ஆராய்ச்சியில் புகுந்தபோது ஆங்கில நாவல்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றிய செய்திகளை அறிய வேண்டும் என்று எண்ணிப்பல நூல்களைப் படித்தேன். அதனால் பெரிதும் பயன் பெற்றேன். இந்தச் சொற்பொழிவுகளை ஆற்றும் வாய்ப்பு நேராமல் இருந்திருந்தால் அந்தப் பயன் எனக்குக் கிடைத்திராது. viii இந்தச் சொற்பொழிவுகளில் தமிழ் நாவல்களின் ஆராய்ச்சியை முழுமையாக வெளியிட்டிருக்கிறேன் என்று சொல்ல இயலாது. குறிப்பிட்ட கால வரம்புக்குள் பேச வேண்டிய வரையறை இருந்ததனால் அதற்குள் அடங்கும்படி கருத்துக்களை வகை செய்து

கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே எல்லா நாவல்களையும் படித்து அறிந்து எடை போட்டுப் பேச முடியவில்லை. இன்றும் தமிழகத்தில் புகழ் பெற்ற நாவலாசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். பல அரிய நாவல்களை அவர்கள்படைத் திருக்கிறார்கள். அந்த நாவல்களைப் பற்றி நான் ஆராய வில்லை. வாழும் ஆசிரியர்களின் படைப்புக்களைப் பற்றி ஆராய்வதில் பல சங்கடங்கள் உண்டு.பொது வகையில் சொல்லி விட்டால்போதுமென்றும், இந்தச்சொற்பொழிவு களில் மேலே விரிவாக ஆராய இடம் இல்லை என்றும் எண்ணியே அவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லவில் ைல. மூன்று சொற்பொழிவுகள் அடங்கிய இப்புத்தகம் தமிழுறவு வெளியீடாக வருகிறது. இதனை வெளியிட்டுக் கொள்ளும்படி இசைவு தந்ததற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தமாலை" 1-8-66 கி.வா. ஜகந்நாதன்

பொருளடக்கம்

படைப்புகள்

நாவல்கள்

- 1879-ல் பிரதாப முதலியார் சரித்திரம் புகழ் பெற்ற கற்பனைக்கதை, தமிழ் புதினங்களின் முன்னோடி. இது ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- 1887-ல் சுகுண சுந்தரி புதினம்

பிற படைப்புகள்

வேதநாயகம் பிள்ளை ஆக்கிய நூல்கள் பல. அவற்றுள் சில:

- 1860 - நீதி நூல்
- 1862-ல் சித்தாந்த சங்கிரகம் - உயர்நிலை ஆங்கிலத்தில் இருந்த சட்டத் தீர்புகளைத் தமிழில் மொழியாக்கம் செய்த நூல்
- 1869-ல் பெண்மதி மாலை - பெண்களுக்கு ஏற்ற அற முறைகளைப் பாட்டுகளாலும் கட்டுரைகளாகவும் கூறும் நூல்.

- 1873-ல் மூன்று நூல்கள் திருவருள் அந்தாதி, திருவருள் மாலை, தேவமாதர் அந்தாதி இவை செய்யுள் நூல்கள். கிறித்துவ மதம் பற்றியது. மத வரலாறு, மற்றும் கடவுள்பால் அவருக்கிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவது.
- 1878-ல் சர்வ சமய சமரசக் கீர்த்தனை ஏறத்தாழ 200 இசைப்பாடலகள்.
- 1889-ல் சத்திய வேத கீர்த்தனை

பொம்மைக் கலியாணம், பெரியநாயகியம்மன் என்னும் நூல்களும் மற்றும் பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார்.

தமிழ் நாவல் உலகின் தந்தை

மாயூரம் வேதநாய்கம் பிள்ளை

01]https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZt9l0ly.TVA_BOK_0001928/mode/2up

02]https://www.tamilvu.org/library/nationalized/pdf/10-kalaimani.en.vee/maayuramvethanaayakampillai.pdf

புதிய புத்தகம் பேசுது - ஜூன் 2010

மாயூரம் வேதநாயகம் பிள்ளை

{புத்தகம் பேசுது ஆசிரியர் குழு}

https://www.keetru.com/index.php/2009-10-07-11-03-58/pudiyapoothagampasuthu-june10/9989-2010-07-16-02-03-39

தமிழ்ப் புதின இலக்கியத்தின் தந்தை என்ற பெருமைக்குரிய வேதநாயகம் பிள்ளை சமூகத்தில் எல்லாத் தரப்பு மக்களுக்கும் இன்பம் ஊட்டுவதற்காகவும், அறிவூட்டுவதற்காகவும், புதினத்தைப் பயன்படுத்த முடியுமென எதிர்கால எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியவர். தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டிருந்த தொய்வையும், வறட்சியையும் போக்கிப் புத்துயிரூட்டி, இலக்கிய வளர்ச்சிக்குப் புதிய களங்களை அமைத்துக்

கொடுத்தவர் வேதநாயகம் பிள்ளை. தமிழில் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரம் தமிழ் மொழி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

வேதநாயகம்பிள்ளையின் படைப்புகளும் அவை வெளியான ஆண்டுகளும்

உரைநடை

1. பெண் கல்வி 1869

2. பெண் மானம் 1870

3. பிரதாப முதலியார் சரித்திரம் 1879

4. சுகுணசுந்தரி 1887 கவிதை

5. நீதிநூல் 1858

6. பெண்மதி மாலை 1869

7. பொம்மைக் கலியாணம்

8. சோபனப் பாடல்கள் 1862

9. தனிப் பாடல்கள் 1908

சமய இலக்கியம் (கவிதை)

10. திருவருள் மாலை 1873

11. திருவருள் அந்தாதி 1873

12. தேவமாத அந்தாதி 1873

13. தேவ தோத்திர மாலை 1889

14. பெரிய நாயகி அம்மை பதிகம் 1873

இசை

15. சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் 1878

16. சத்திய வேதக் கீர்த்தனைகள் 1889

மொழிபெயர்ப்பு

17. சித்தாந்த சங்கிரகம் 1862

18. 1850 - 61 ஆண்டுகளின் நீதிமன்றத் தீர்ப்புகள் 1863

TNPSC WINNERS

மாயூரம் வேதநாயகம் பிள்ளை

https://tnpscwinners.com/%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%82%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%B5%E0%AF%87%E0%AE%A4%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88/

Table of Contents



மாயூரம் வேதநாயகம் பிள்ளை

- ஊர் = திருச்சி மாவட்டம் குளத்தூர்
- பெற்றோர் = சவரிமுத்துப் பிள்ளை – ஆரோகிய மரி அம்மை
- தொடக்கக்கல்வியை தந்தையிடம் கற்றார்
- ஆங்கிலம், தமிழ்மொழி = தியாகராச பிள்ளை என்பாரிடம் கற்றார்
- பாப்பம்மாள் என்பவரை மணந்தார்

சிறப்புப்பெயர்

- முதல் மறுமலர்ச்சி கவிஞர்
- தமிழ் நாவல் உலகின் தந்தை
- தமிழ் புதின இலக்கியத்தின் தந்தை
- பெண்ணிய சிந்தனையின் முன்னோடி
- முதல் வசன நடை நூல் வித்தகர்
- தமிழில் சட்ட நூல் தந்த முன்னோடி
- இசைப் புலவர்
- முதல் இந்திய நீதிபதி
- முதல் தமிழ் நீதிபதி
- தமிழக மறுமலர்ச்சியின் விடிவெள்ளி
- தமிழகத்தின் முதல் மொழிபெயர்ப்பாளர்

பணி

- மாயூரம் வேதநாயகம் பிள்ளை நீதிமன்றங்களில் பதிவாளராகவும் மொழிபெயர்ப் பாளராகவும் பணியாற்றிய பின் 1856-இல் தரங்கம்பாடியில் முனிசீஃப் வேலையில் அமர்ந்தார்.
- மாயவரம் மாவட்ட முனிசீப்பாக 13 ஆண்டுகள் பணி புரிந்தமையால் இவரை மாயவரம் வேதநாயகம் பிள்ளை என்றே அழைக்கலாயினர்.
- மாயவரத்தின் நகர் மன்ற தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

மொழிபெயர்ப்புப் பணி

- கி.பி 1805 முதல் கி.பி. 1861-ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழியில் இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புகளை அதாவது 56 ஆண்டுகள் தீர்ப்புகளைத் தமிழில் மொழி பெயர்த்து சித்தாந்த சங்கிரகம் என்ற நூலாக 1862-இல் வெளிட்டார்.
- மேலும் 1862, 1863-ஆம் ஆண்டுகளின் தீர்ப்புகளையும் அவ்வாறே வெளியிட்டார்.

- நீதிமன்ற தீர்ப்புகளை முதன் முதலில் மொழி பெயர்த்த தமிழறிஞர் வேதநாயகம் பிள்ளை ஆவார்



நூல்கள்

- நீதிநூல் திரட்டு (45 அதிகாரங்கள், 529 விருத்தப்பா)
- பிரதாப முதலியார் சரித்திரம் (தமிழின் முதல் நாவல்)
- சுகுண சுந்தரி (இவரின் 2-வது நாவல்)
- பொம்மைக் கலியாணம்

மொழிபெயர்ப்பு நூல்

- சோபனப் பாடல்கள்
- சித்தாந்த சங்கிரகம் (ஆங்கில சட்டங்களை தமிழில் மொழிபெயர்த்த நூல்)
- உயர்நீதிமன்ற தீர்ப்புகள்

இசை நூல்கள்

- சர்வ சமய சமரசக் கீர்த்தனை
- சத்திய வேத கீர்த்தனை

சமய நூல்கள்

- பெரியநாயகியம்மன்
- பெரியநாயகி அம்மைப் பதிகம்
- திருவருள் அந்தாதி
- திருவருள் மாலை
- தேவமாதா அந்தாதி
- தேவ தோத்திர மாலை


பெண்மை நூல்கள்

- பெண்மதிமாலை
- பெண்கல்வி (பெண்களின் முன்னேற்றத்திற்காக எழுதப்பட்ட முதல் தனி நூல்)
- பெண் மானம் (வசன காவியம் எனப்படும் நூல் இது)

குறிப்பு

- இவர் தனது சமகாலத் தமிழ் அறிஞர்களான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் ஆகியோருடன் நட்பு பாராதி வந்தவர்
- இசையிலும் வீனை வாசிப்பதிலும் வல்லவர்
- ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றி இருக்கிறார்
- வடமொழி, பிரெஞ்ச், இலத்தீன் ஆகிய மொழிகளை அறிந்தவர்

மாயூரம் வேதநாயகம் பிள்ளை



- தமிழின் முதல் நாவலான "பிரதாப முதலியார் சரித்திரம்" என்னும் நாவலை இயற்றியவர் இவரே
- 1876-1878 ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார் நீயே புருஷ மேரு என்ற பாடலை எழுதினார்
- பெண்கல்விக்கு குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமை இவர் ஆவார்.
- மாயவரத்தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இது தமிழகத்தில் பெண்களுக்காக தொடங்கப்பட்ட முதல் பள்ளி.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை – சிறப்புகள்

- தமிழின் முதல் நாவலான "*பிரதாப முதலியார் சரித்திரம்*" என்னும் நாவலை இயற்றியவர் இவரே
- **1876-1878** ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார் நீயே புருஷ மேரு என்ற பாடலை எழுதினார்
- பெண்கல்விக்கு குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமை இவர் ஆவார்.
- தொடக்கக் கால பெண் விடுதலைக்கு வித்திட்டவர்
- மாயவரத்தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இது தமிழகத்தில் பெண்களுக்காக தொடங்கப்பட்ட முதல் பள்ளி.
- தமிழகப் பெண்களின் பரிதாப நிலை குறித்து முதன் முதலில் பாடிய கவிஞர் இவரே (குறிப்பு = சிலர் வேதநாயகருக்கு முன்பே புதுவைக் கவிஞர் சவரிராயலு நாயக்கர் பெண்கல்வி குறித்து பாடியுள்ளார் என்ற தகவலும் உண்டு)
- ஆங்கில மொழியின் வளர்ச்சியை, "ஆங்கில தலையெடுக்க ஏன் என்று கேட்பாரில்லாத் தமிழ்" என்று தமிழ் குறித்துக் கவலைப்பட்ட முதல் தமிழராகத் தன்னைப் பதிவு செய்கிறார் வேதநாயகர்.

முதல் இந்திய நீதிபதி

- **1856** இல் நடைபெற்ற ஆங்கில அரசின் உரிமையியல் நீதிமன்ற நீதிபதிகளைத் தேர்வு செய்யும் எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டு முதன்மையாகத் தேர்ச்சி பெற்றுத் தமிழரான வேதநாயகம் பிள்ளை முதல் இந்திய நீதிமன்ற நீதிபதியாக **1857** ஆம் ஆண்டில் தம் **31** ஆம் அகவையில் தரங்கம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதியாக பதவி ஏற்றார்.

தமிழகத்தின் முதல் மொழிபெயர்ப்பாளர்

- சட்டம் தமிழில் நடத்தப்பட வேண்டும் என்னும் ஆர்வத்தால், "சிவில் வழக்கு" நடைமுறைத் தொகுப்பு **(1859)** திருத்தப்பட்ட நிலையில், மெக்காலேயின் தண்டனை விதித் தொகுப்பு அரசாங்க அறிவிப்புகளாக மொழிபெயர்க்கப்பட்டு தமிழில் வெளியிடப்பட்டன.
- இந்நூல்கள் வெளியிடப் பட்டதன் மூலம் தமிழகத்தின் முதல் மொழிப் பெயர்ப்பாளராகத் திகழ்கிறார் பிள்ளை அவர்கள்.

எதிலும் முதன்மை

- வேதநாயகர், நீதிபதி பதவியில் அமர்ந்த முதல் தமிழர், முதல் இந்தியர்.
- முதல் நாவலாசிரியர்.

- முதல் மறுமலர்ச்சிக்கவிஞர்
- பெண்ணியத்திற்கு குரல் கொடுத்த முதல் மறுமலர்ச்சி எழுத்தாளர்.
- பிரிட்டிஷ் இந்தியாவில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர்.
- தமிழில் வழிபாடு நடைபெற முதல்படி அமைத்தவர்.
- இந்நாள் தமிழிசை இயக்கத்தின் முன்னவர்
- தமிழ் உரைநடைக்கு வளம் சேர்த்த முன்னோடி
- தமிழ் ஆட்சி மொழி, நீதி மன்ற மொழி, வழிப்பாட்டு மொழி, கல்வி மொழி ஆவதற்கு முதன் முதல் குரல் கொடுத்தவர்.

Please click the following to know about them:

- மறைமலையடிகள்
- பரிதிமாற்கலைஞர்
- ந.மு.வேங்கடசாமி நாட்டார்
- ரா.பி.சேதுப்பிள்ளை
- திரு.வி.க
- வையாபுரிப்பிள்ளை
- தி.சு.நடராசன்
- ஆறுமுக நாவலர்
- இலக்கணம் – தமிழாய் எழுதுவோம்
- வசனநடை கைவந்த வள்ளலார்
- பெருமழைக்காலம்
- பிறகொரு நாள் கோடை
- நெடுநல்வாடை
- முதல்கல்
- இலக்கணம் – நால்வகைப் பொருத்தங்கள்
- மாயூரம் வேதநாயகம் பிள்ளை

இந்து தமிழ் திசை

மாயூரம் வேதநாயகம் பிள்ளை

https://www.hindutamil.in/news/blogs/60951-10.html



BY ராஜலட்சுமி சிவலிங்கம்

தமிழின் முதல் புதினத்தைப் படைத்தவரும், மறுமலர்ச்சிக் கவிஞரும், சமூக சீர்திருத்தவாதியுமான மாயூரம் வேதநாயகம் பிள்ளை (Mayuram Vedanayagam Pillai) பிறந்த தினம் இன்று (அக்டோபர் 11). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* திருச்சி மாவட்டம் குளத்தூரில் (1826) பிறந்தார். தந்தையிடம் கல்வியைத் தொடங்கியவர், தமிழ், ஆங்கிலக் கல்வியை தியாகராச பிள்ளையிடம் பயின்றார். சிறு வயதிலேயே எழுது வதில் ஆர்வமும் ஆற்றலும் கொண்டி ருந்தார். திருமணம், விருந்தினர் வருகை போன்ற நிகழ்வுகளில் நகைச்சுவைக் கவிதைகள் எழுதுவார்.

* நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளர், பதிவாளராகப் பணியாற்றினார். பின்னர், தரங்கம்பாடியில் முன்சீஃப் பணியில் சேர்ந்தார். மாயூரம் மாவட்ட முன்சீஃபாக 13 ஆண்டுகள் பணி புரிந்ததால், மாயூரம் வேதநாயம் பிள்ளை என்றே அழைக்கப்பட்டார். (பின்னாளில் இவ்வூர் பெயர் மாயவரம் என்று மருவி, தற்போது மயிலாடுதுறை எனப்படுகிறது.)

* மாயவரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இந்த காலகட்டத்தில் தமிழின் முதல் புதினமான 'பிரதாப முதலியார் சரித்திரம்' நூலைப் படைத்தார். மேலும் 15 நூல்கள் எழுதினார். வீணை வாசிப்பதில் வல்லவர்.

* வாழ்க்கை நெறிகள், பொது நீதிகள், பெண் கல்வி, ஒற்றுமை உணர்வு, புதிய சிந்தனைகள், முற்போக்கு கருத்துகள் ஆகியவை இவரது கவிதைகளின் கருப்பொருளாக அமைந்தன. தமிழ் கவிதையில் இந்த பாணி ஒரு புதிய உத்தியாக, முதல் முயற்சியாக கருதப்படுகிறது.

* சமகாலத் தமிழ் அறிஞர்களான மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ராமலிங்க வள்ளலார், திருவாவடுதுறை மடத்தின் மகாசன்னிதானம், சுப்பிரமணிய தேசிகர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோருடன் நல்ல நட்பு கொண்டிருந்தார்.

* 1805 முதல் 1861 வரையிலான நீதிமன்றத் தீர்ப்புகளை ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்த்து சித்தாந்த சங்கிரகம் என்ற நூலாக வெளியிட்டார். தீர்ப்புகளை முதலில் மொழிபெயர்த்த பெருமைக்கு

உரியவர். சட்ட விதிகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் முதலில் வெளியிட்டார்.

* தமிழ் உரைநடையை வளம் பெறச் செய்த முன்னோடிகளில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். இவரது கட்டுரைகள், பெண் கல்வி, தாய்மொழிப் பற்று, கடவுள் பக்தி, நல்லாட்சி, நீதி நெறிகள் என பல அம்சங்களையும் உள்ளடக்கியவை. இவை தமிழில் கட்டுரை இலக்கிய வளர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்தன.

* பெண் கல்வி குறித்து இவர் எழுதிய கட்டுரைகள் உரைநடைச் சிறப்புக்கு சான்றாக விளங்குகின்றன. மாயவரத்தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இது தமிழகத்தில் பெண்களுக்காக தொடங்கப்பட்ட முதல் பள்ளி.

* கிறிஸ்தவ வழிபாட்டு பாடல்கள் கிரேக்கம், லத்தீன், ஆங்கில மொழிகளிலேயே இருந்தன. தமிழ் கிறிஸ்தவர்கள் தமிழிலேயே உணர்ந்து வழிபட வேண்டும் என விரும்பினார். திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, தேவ தோத்திர மாலை, பெரியநாயகி அம்மைப் பதிகம் போன்ற இலக்கியங்களைப் படைத்தார்.

* தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது, தன் சொத்துகள் அனைத்தையும் தானமாக வழங்கினார். குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறும் வழக்கத்தை கடுமையாக எதிர்த்தார். தமிழ் இலக்கிய வரலாற்றில் திருப்புமுனை ஏற்படுத்தியவர், மறுமலர்ச்சிக் கவிஞர், சமூக சீர்திருத்தவாதி எனப் போற்றப்படும் வேதநாயகம் பிள்ளை 63 வயதில் (1889) மறைந்தார்.

Also visit:

01] https://tamilnation.org/literature/vedanayagampillai

02] https://tamil.wiki/wiki/Mayuram_Vedanayagam_Pillai

முருகியல்

https://arangameena.blogspot.com/2021/10/blog-post_69.html

பெண்மதிமாலை

வேதநாயகம் பிள்ளை

மாயூரம் வேதநாயகம் பிள்ளை (அக்டோபர் 11, 1826 - சூலை 21, 1889) ஒரு புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர். இவர் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குளத்தூரில் பிறந்தார். இவரின் பெற்றோர், சவரிமுத்துப் பிள்ளை, தாயார் ஆரோக்கிய மரி அம்மையார். தொடக்கக் கல்வியைத் தமது தந்தையிடம் கற்ற வேதநாயகம் ஆங்கிலம், தமிழ் மொழிக்கல்வியை திருச்சிராப்பள்ளியை சேர்ந்த தியாகராச பிள்ளை என்பாரிடம் பயின்றார். சிறு வயதிலேயே திருமணங்கள், விருந்தினர் வருகை போன்ற நிகழ்வுகளின் போது நகைச்சுவையான கவிதைகளை எழுதினார். தமது 25ஆம் வயதில் 1851ல் காரைக்காலைச் சேர்ந்த பாப்பம்மாள் என்ற மங்கையைத் திருமணம் செய்தார்.

இவர் நீதிமன்றங்களில் பதிவாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றிய பின் 1856இல் தரங்கம்பாடியில் முனிசீஃப் வேலையில் அமர்ந்தார். மாயவரம் மாவட்ட முனிசீப்பாக 13 ஆண்டுகள் பணி புரிந்தமையால் இவரை மாயவரம் வேதநாயகம் பிள்ளை என்றே அழைக்கலாயினர். மாயவரத்தின் நகர் மன்ற தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அந்தக் காலகட்டத்தில் 16 புத்தகங்கள் எழுதினார். தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தையும் அப்போதே எழுதினார். வீணை இசைப்பதிலும் வல்லமை பெற்றிருந்தார். கி.பி 1805 முதல் கி.பி. 1861 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழியில் இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புகளை தமிழில் மொழி பெயர்த்து சித்தாந்த சங்கிரகம் என்ற நூலாக 1862ல் வெளியிட்டார். மேலும் 1862, 1863 ஆம் ஆண்டுகளின் தீர்ப்புகளையும் அவ்வாறே வெளியிட்டார். இவ்வாறு தீர்ப்புகளை முதன் முதலில் மொழி பெயர்த்த தமிழறிஞர் வேதநாயகம் பிள்ளை ஆவார்.

வேதநாயகம் பிள்ளை ஆக்கிய நூல்கள் பல. அவற்றுள் சில:

- **சித்தாந்த சங்கிரகம் (நூல்) - உயர்நிலை ஆங்கில சட்டங்களை தமிழில் செய்த நூல்**
- **பெண்மதி மாலை (நூல்) - பெண்களுக்கு ஏற்ற அற முறைகளைப் பாட்டுக்களாலும் உரைநடையாலும் கூறும் நூல்.**
- **செய்யுள் நூல்கள் - திருவருள் அந்தாதி (நூல்), திருவருள் மாலை (நூல்), தேவமாதர் அந்தாதி (நூல்)**
- **பிரதாப முதலியார் சரித்திரம் புகழ் பெற்ற கற்பனைக்கதை, தமிழ் புதினங்களின் முன்னோடி. இது ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.**
- **"சர்வ சமய சமரசக் கீர்த்தனை (நூல்) ஏறத்தாழ 200 இசைப்பாடல்கள்.**

- சுகுண சுந்தரி (நூல்) புதினம்
- சத்திய வேத கீர்த்தனை (நூல்)
- பொம்மைக் கலியாணம் (நூல்), பெரியநாயகியம்மன் (நூல்) என்னும் நூல்களும் மற்றும் பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார்.

இவர் இயற்றிய பெண்மதி மாலை நூலில்
மாதா பிதா வணக்கம் என்ற தலைப்பில்
உள்ள பாடல்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

பாடல்

1. மாதா பிதாவை வணங்கு – நாளும்
   ஆதாரமாகவே யவர்சொல்லுக்கிணங்கு
2. தந்தை தாய் சாபம் பொல்லாது – அவர்
   சிந்தை நொந்தால் மக்கள் செல்வம் நில்லாது
3. மாதா பிதாவுக்குத் துரோகம் – செய்யும்
   பாதகரைச் சுற்றும் பாவம் அநேகம்
4. பெற்றவர் நேசத்தைத் தேடு அவர்
   குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொண்டாடு
5. தாய்தந்தைக் குதவாத பிள்ளை – தனது
   ஆயுசும் வாழ்வு மடியோடே கொள்ளை
6. கட்டியுனை ஆளாக்க தாமே முன்பு
   பட்டபாடுகள் சொல்லப் பாரதமாமே
7. உள்ளதாய் தந்தைக்குத் தீங்கு செய்யும்
   பிள்ளையைத் தன்பிள்ளை யேபழிவாங்கும்
8. கடலைப் போல்மாதா சகாயம் – அதற்கு
   உடல்செருப்பாத் தைத்துப் போடுதல் ஞாயம்

மதியிது மதியிது பெண்ணே – புண்ணிய
வதியல்லவோ நல்ல மகராசி கண்ணே.

விளக்கம்

பெண் மதி மாலை என்ற நூல் அக்காலப் பெண்களுக்குப் பல அறிவுரைகளை வழங்குகின்றது. கணவன் நல்வார்த்தையைத் தட்டாது, மாமிமேல் வன்மம் காட்டாதே, தலையணை மந்திரம் தீது என்பன போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது. இந்நூலில் அவற்றுள் தாய் தந்தை வணக்கம் என்ற பகுதியில், தாயையும் தந்தையையும் எவ்வாறு போற்ற வேண்டும் என்பது குறித்த பாடல்களே நமக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

1.மதியுள்ள பெண்ணே! பெற்ற தாயையும் தந்தையையும் எப்போதும் வணங்க வேண்டும். அவர்களின் சொற்களுக்கு நாள்தோறும் அடிபணிந்து செயல்பட வேண்டும்.

2. அவர்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயல்பட்டு, அவர்களின் சாபத்தைப் பெறக் கூடாது. பெற்றோர்களின் மனம் நோகும்படிச் செயல்படும் பிள்ளைகளின் செல்வங்கள் நிலைபெறாமல் அழிந்து விடும்.

3. தாய்க்கும் தந்தைக்கும் துரோகம் செய்யும் பிள்ளைகளுக்கு வாழ்நாள் முழுவதும் பாவங்கள் தொடரும்.


4. பெற்றவர்கள் செய்யும் தவறுகளை நீக்கிவிட்டு அவர்களின் நற்குணத்தைக் கொண்டாட வேண்டும். அவர்களின் உள்ளத்தில் மறைந்திருக்கும் நேசத்தைத் தேட வேண்டும்.

5.தாய்க்கும் தந்தைக்கும் உதவாத பிள்ளை வாழ்நாள் முழுவதும் குற்றம் செய்தவனாகவே கருதப்படுவான். அதனால் அவன் ஆயுட்காலமும் குறைந்துபோகும்.

6. சமூகத்தில் தன் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்கு உயர்த்த பெற்றோர் செய்யும் தியாகங்களையும், துன்பங்களையும் கூற முற்பட்டால் ஒரு பாரதமே எழுதிவிடலாம்.

7.பெற்றோர்க்குத் தீங்கு செய்யும் பிள்ளைகளை, அவர்களின் பிள்ளைகளே பழி வாங்குவர்.

8.தாயின் அரவணைப்பும், அவர்களின் சேவையும் கடலைப்போல பரந்தது. அதனை உணர்ந்து நம் தாயின் காலுக்குத் நம் உடம்பை செருப்பாகத் தைத்துப் போடுதலே நாம் அவர்களுக்குச் செய்யும் கடமையாகும் என்று அறிவுரை கூறுகின்றார் ஆசிரியர்.










தமிழ்மொழி மீட்புப் போராளி
மாயூரம் வேதநாயகம்
11.10.1826 - 21.7.1889


சர்வசமரசக்
கீர்த்தனைகள்
வேதநாயகம்பிள்ளை


பிரதாப முதலியார்
சரித்திரம்
மாயூரம்
வேதநாயகம் பிள்ளை


அக்டோபர் 11, 1826
தமிழுக்கும், நீதித்துறைக்கும்
பெருமை தேடித் தந்த
மாயூரம்
வேதநாயகம் பிள்ளை
பிறந்தநாள் இன்று
புதின இலக்கியத்திற்கு
புத்துயிர் ஊட்டிய அண்ணாரின்
புகழ் பாடுவோம்!



தன் சொத்தை விற்று
ஊர் பஞ்சம் போக்கியவர்
மாயூரம் வேதநாயகம் பிள்ளை


சர்வ சமய சமரசக்
கீர்த்தனைகள்
மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை


மாயூரம் வேதநாயகம் பிள்ளை
மாயூரம் வேதநாயகம் பிள்ளை
• ஊர் - திருச்சி மாவட்டம் குளத்தூர்
• பெற்றோர் - சவரிமுத்துப் பிள்ளை - ஆரோக்கிய மரி அம்மை
• தொடக்கக்கல்வியை தந்தையிடம் கற்றார்
• ஆங்கிலம், தமிழ்மொழி - தியாகராச பிள்ளை என்பாரிடம் கற்றார்
• பாப்பம்மாள் என்பவரை மணந்தார்
சிறப்புப்பெயர்
• மறுமலர்ச்சி கவிஞர்
• தமிழ் நாவல் உலகின் தந்தை
• முதல் வசன நடை நூல் வித்தகர்
• தமிழில் சட்ட நூல் தந்த முன்னோடி
• இசைப் புலவர்
• முதல் இந்திய நீதிபதி
• முதல் தமிழ் நீதிபதி
Facebook.com/tnpscwinners
www.tnpscwinners.com


யார் இந்த
மாயூரம்
வேதநாயகம்
பிள்ளை?


மாயூரம்
வேதநாயகம் பிள்ளை
படைப்புகளில் நகைச்சுவை
எ. சகுந்தலா, எம்.ஏ., எம்.பில்.


பிரதாப முதலியார் சரித்திரம்
தமிழின் முதல் நாவல்


மாயூரம் வேதநாயகம் பிள்ளை அருளிய
நீதி நூல்
மூலமும் உரையும்
சீதை பதிப்பகம்

பிரதாப முதலியார் சரித்திரம்
வாழ்க்கை வரலாறு

https://ta.wikisource.org/wiki/%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%AA_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D/%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88_%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81



தமிழ் நாவல் தந்தை
ச. வேதநாயகம்பிள்ளை அவர்கள்
14 - 10 - 1826 — 21 - 7 - 1889

மாயூரம் நீதிபதி வேதநாயகரின் வாழ்க்கை வரலாறு

எழுதியவர்: ஆ. பி. அந்தோணி இராசு, எம்.ஏ.,

முன்னோர்:

சோற்று வளமுடைய சோழ நாட்டிலே, திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே 16 கி.மீ. தொலைவில் 'வேளாண் குளத்தூர்' என்றோர் ஊர் உண்டு. அஃது இக்காலத்தில் குளத்தூர் என்று குறுகி வழங்குகிறது. அவ்வூரில் மதுரநாயகம் பிள்ளை என்பவர் பெரிய பண்ணையாராக இருந்தார். அவருக்கு 50 வயது நடந்தபோது தீராத சூலைநோய் ஒன்று ஏற்பட்டது. நாட்டு மருத்துவமும், கோயில் வழிபாடுகளும் குறையைத் தீர்க்கவில்லை. அவர் ஆவூருக்குச் சென்று, அங்கிருந்து மேலை நாட்டுக் கத்தோலிக்க குருக்களிடம் தனது குறையைக் கூறினார். அவர்கள் மருந்தளித்ததோடு இயேசுவை மன்றாடினால் நோய் நீங்கும் என்று உரைத்தனர். அவரும் இயேசுவை மன்றாடி மருந்துண்டார். தனது நோய் நீங்கப் பெற்றார். அதனால் அவரும் அவரது குடும்பத்தாரும், சைவ சமயத்தை விட்டுக் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினர்.

பிறப்பு:

அந்த மதுரநாயகத்தின் மடியிலே உதித்த சவரிமுத்துப் பிள்ளை என்பவருக்கும், ஆரோக்கியமரி என்பவருக்கும் மகனாக, 1826ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ஆம் நாள்

உதித்தவரே நம் வேதநாயகர். பெற்றோராலும் மற்றோராலும் சீராட்டியும் பாராட்டியும் வளர்க்கப்பெற்ற வேதநாயகர், பள்ளிப் பருவம் எய்தியதும் தமது ஊரில் இருந்த திண்ணைப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அங்கு அருமைத் தமிழையும் நெடுங் கணக்கையும் ஐயந் திரிபின்றிக் கற்றுத் தேர்ந்தார்.

ஆங்கிலக் கல்வி :

ஆங்கிலேயர் ஆட்சி நடத்திய அக்காலத்தில் "அரைக் காசு வேலையானாலும், அரசாங்க வேலையாகுமா?" என்ற கொள்கையே எங்கும் நிலவியது. ஆதவால், தன் மகன் ஆங்கிலம் சுற்று அரசாங்க வேலை பார்க்க வேண்டும் என்று வேதநாயகரின் தந்தை விரும்பியதில் வியப்பில்லை. இக்காலம் போல் ஆங்கிலம்கற்பிக்கும் பள்ளிகள் ஊர்தோறும் இல்லாத காலம் அது. திருச்சிராப்பள்ளி போன்ற பெருநகரங்களில் கூட இரண்டொரு பள்ளிகளே இருந்தன. அரசாங்கத்தில் வேலை பார்த்த சிலர் மாணவர்களுக்குத் தம் வீட்டில் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும் வழக்கமும் இருந்தது.

திருச்சிராப்பள்ளியில் இருந்த தென் மாநில வழக்கு மன்றத்தில் (Southern Provinceal Gourt) தியாகப் பிள்ளை என்பவர் மொழி பெயர்ப்பாளராக வேலை பார்த்து வந்தார். அவர் ஆங்கிலமும் அருந்தமிழும் நன்கு

கற்றவர். சவரிமுத்துப் பிள்ளை, தக்கார் சிலரின் பரிந்துரையுடன் தியாகப்பிள்ளையை அணுகித் தன் மகனுக்கு ஆங்கிலம் கற்றுத் தருமாறு வேண்டினார். வேதநாயகரின் அறிவுத்திறன் அவரது முகத்தில் தோன்றவே, தியாகப் பிள்ளை அவரைத் தன் மாணவனாக ஏற்றுக் கொள்ள இசைந்தார்.

வேதநாயகர் அவர் வீட்டிலேயே தங்கியிருந்து, ஒரு குல முறைப்படி ஆங்கிலமும் அன்னைத் தமிழும் கற்கலானார். ஆங்கிலத்தில் அருமையாகப் பேசவும் எழுதவும் வல்லவர் தியாகப் பிள்ளை. அருந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர். அத்தகைய கூட்டுறவால் நம் வேதநாயகரும் இரு மொழி வல்லுநர் ஆனார். இளமையிலேயே தமிழ்க் கவிகள் இயற்றும் திறமையும் பெற்றார். தியாகப் பிள்ளையிடம் வடமொழியும் பிரெஞ்சும்கூட ஓரளவு கற்றுக் கொண்டார்.

இளமைக் கவி :

ஒரு முறை, குளத்தூரிலிருந்து வேதநாயகரின் பெரியன்னை மகன் அடைக்கலம் என்பவர், ஓர் அலுவலாகத் திருச்சிராப்பள்ளிக்கு வந்தார். நம் வேதநாயகர் பின்வரும் கவிதையைப் பாடி, அவரை வீதியில் எதிர்கொண்டு வரவேற்றார்.

“சீர்பெருகு குளத்தூர்வாழ் அடைக்கல அண்
ணாகருணைத் தியாகா வாநீ

ஏர் பெருகு நின் சுமுகங் கண்டு (உ) வந்தேன்
இன்பமிகு நீயு நானும்

ஓர்திறமே உடன்பிறவாத் தோடமொன்றே
மாமணியும் ஒளியும் போல

நேர் உறவே நிலைத்திருக்கும் எந்நாளும்
நம்மிருவர் நேசந் தானே”

மற்றொரு முறை, தனக்கு மைத்துனன் முறையாகவுள்ள ஒருவருக்குத் திருமணம் நடைபெற்றபோது, நகைச்சுவை ததும்ப அவரை வாழ்த்திப் பின்வரும் பாடலைப் பாடினார்.

“உழவுத்தொழில் செய்து உமக்கு உடம்பெல்லாம் சேறு.
ஊத்தையைக் கழுவப் பற்றுமோ ஒன்பது ஆறு
பழங்கூழ் உமக்கு பாலுடன் சோறு
பயப்படாதிரும் உமக்கு ஆயுசு நூறு”

அரசாங்க அலுவல்:

வேதநாயகரின் ஆசிரியரான தியாகப் பிள்ளை அலுவல் பார்த்துவந்த தென் மாநில வழக்கு மன்றத்தில் கார்டன் (Mr. Gorden) என்பவர்

நீதிபதியாக இருந்தார். தியாகப் பிள்ளையின் பரிந்துரையை ஏற்று, அந்நீதிபதி நம் வேதநாயகரை அந்நீதி மன்றத்திலே ஆவணக் காப்பாளராக (Record keeper) அமர்த்திக் கொண்டார். இங்ஙனம் தன் 22ஆம் அகவையில் (1848இல்) வேதநாயகர் அரசாங்க அலுவலில் அமர்ந்தார். அறிவும் இளமையும் கொண்ட அவர் சோம்பலின்றி ஊக்கத்துடன் தன் அலுவல்களைச் செய்து, தன் மேலதிகாரிகளின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவர் ஆனார். தன் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களை முறைப்படுத்தி அடுக்கிப் பாதுகாத்து வந்ததோடு, அவற்றைப் பகுத்துப் பார்த்து அரசாங்க தடைமுறைகளையும், நீதிமன்ற நெறிமுறைகளையும் அறிந்தார். ஈராண்டுகள் இங்ஙனம் கழித்தன.

திருச்சிராப்பள்ளியிலிருந்த மாவட்ட நீதிமன்றத்திற்கு (District Court) 1850ஆம் ஆண்டில் மொழி பெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்பட்டார். ஆங்கிலமும் அருந்தமிழும் அறிந்த பலர் அவ்வேலைக்காக விண்ணப்பித்தனர். அங்கு நீதிபதியாக இருந்த பாய்லோ என்பவர், விண்ணப்பித்தவர்களை அழைத்து நேர்முகத் தேர்வு ஒன்று நடத்தினார். ஆங்கிலத்தில் உள்ளதைத் தமிழிலும், தமிழிலுள்ளதை ஆங்கிலத்திலும் எழுதிக் காட்டுமாறு கட்டளையிட்டார். வேதநாயகரின் மொழி பெயர்ப்பு மற்றவர்களுடைய மொழி பெயர்ப்புகளை விடச் சிறந்திருந்ததாவ் வேதநாயகர் தேர்வு செய்யப்பட்டு மொழி பெயர்ப்பாளராக அமர்த்தப்பட்டார்.

அலுவலில் ஓர் அல்லல் :

ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்ற அக்காலத்தில் ஆங்கிலமே ஆட்சிமொழியாக அமைந்திருந்தது. ஆகவே அரசாங்க சட்டங்களும் ஆணைகளும் நீதிபதிகளின் தீர்ப்புகளும் ஆங்கிலத்திலேயே இருந்தன. ஆங்கிலம் அறியாத மக்களுக்காக இவற்றைத் தமிழிலே மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. நீதி வேண்டி நீதிமன்றத்திற்கு வரும் நம் மக்கள், தங்கள் முறையீடுகள் முதலியவற்றைத் தாமறிந்த தாய்மொழியாம். தமிழிலேயே எழுதித்தந்தனர். தமிழறியா ஆங்கிலேயர் நீதிபதிகளாய் இருந்ததால், அவர்களுக்காக அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டியிருந்தது. இந்த மொழி பெயர்ப்பு வேலையே வேதநாயகரின் முழுநேர வேலையாயிற்று.

கடமையுணர்வும் கடும் உழைப்பும் உடையவேதநாயகர் தன் வேலைகளைத் திறம்படச் செய்ததோடு, அந்தந்த நாள் வேலைகளை அந்தந்த நாளே முடித்து வந்தார். இதனாள் தன் மேலதிகாரிகளின் அன்புக்கும் பாராட்டுக்கும் அருகர் ஆனார். சில ஆண்டுகள் இப்பணி இடையூன்றி இனிதே சென்றது. ஆனாலும் வேலைப்பளு நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வந்ததால், அன்றைய வேலைளை அன்றே முடிக்க இயலாத நிலை நேர்ந்தது. ஆயினும் அத்தடையை வெல்ல, வேதநாயகர் வேறு ஒரு முறையைக் கையாண்டார். தனக்கு உதவியாக எழுத்தர் ஒருவரைத் தன் சொந்த முறையில் அமர்த்திக் கொண்டு, தான்

மொழிபெயர்த்துச் சொல்வதை அவரை எழுதச் செய்தார். இதனால் மொழிபெயர்ப்பு அலுவல் முட்டின்றிச் சென்றது.

அக்காலத்தில் மாவட்ட வழக்கு மன்றங்களில், வழக்குகளுக்குத் தீர்ப்பளிப்பதில் நீதிபதிக்கு உதவ, “காசியார்” என்ற சான்றாளர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள். வழக்கின் முடிவில், நீதிபதியின் கருத்தும். காசியாரின் கருத்தும் ஒருமித்து இருந்தால், அத்தீர்ப்பு ஏற்றுக் கொள்ளப்படும். இன்றேல், மேலாணை நீதி மன்றமாகிய மாநில நீதி மன்றத்திற்கு வழக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு மறுபடியும் ஆராயப்படும்.

மேஸ்தர் டேவிட்சன் என்பவர் மாவட்ட நீதிபதியாயிருந்தபோது, இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடைவே சமைய அடிப்படையில் மூண்ட கலகவழக்கொனறு ஆராயப்பட்டு வந்தது. அதன் முடிவில், நீதிபதியும், காசியாரும் கருத்துவேறுபாடு கொண்டனர். அதனால் அவ்வழக்கு மாநில நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டியதாயிற்று. அதன் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவேண்டிய வேலை வேதநாயகருடையதாயிற்று. அவரும் அவற்றைச் செவ்வனே முடித்து, நீதிபதியிடம் ஒப்படைத்தார். அதுபோது நீதிபதி டேவிட்சன் வேற்றூருக்கு மாற்றலாகிச் செல்ல நேர்ந்ததால், அவர் அந்த ஆவணங்களைப் பார்வையிட்டு, மேலாணை நீதி மன்றத்திற்கு அனுப்புவதற்காகத் தன்னுடன் எடுத்துச் சென்றார். இறைவன் திருவருள் வேறாக இருந்ததால், டேவிட்சன் எதிர்பாரா வகையில் நோயுற்று இறந்தார். அவர் எடுத்துச் சென்ற ஆவணங்கள் மேலதிகாரிகளுக்கு அனுப்பப்படாமல் அவரிடமே தங்கிவிட்டன. வேதநாயகர் இதனை அறியார்.

சிறிது காலம் சென்றபின், இந்து முஸ்லீம் கலக வழக்கு மாநில நீதி மன்றத்தால் ஆய்வு செய்யப்பட்டபோது, அது தொடர்பான ஆவணங்கள், மாவட்ட நீதி மன்றத்திலிருந்து வரவில்லை யென்பது புலனாயிற்று. அவற்றை உடனே அனுப்பி வைக்குமாறு மாவட்ட நீதிபதிக்கு ஆணை அனுப்பப்பட்டது. அப்போது நீதிபதியாயிருந்தவர் மேஸ்தர் கிரீன்வே என்பவர். அவர் டேவிட்சனுக்கு எதிர்மறையான கயமைக் குணம் படைத்தவர். ஆதலால், அரசாங்க ஆணை கிடைத்தவுடன், அவ்வழக்குத் தொடர்பான ஆவணங்கள் அனுப்பப்படாமைக்கு வேதநாயகரே காரணமானவர் என்று முடிவு செய்து, அவரை வேலையினின்று விலக்கினார். இதனைத் தன் மேலதிகாரிகளுக்கும் தெரிவித்தார். இங்ஙனம், வேதநாயகர் தான் இழைக்காத குற்றத்திற்கான தண்டனையை ஏற்க வேண்டியவரானார்.

உண்மைக்கு வெற்றி :

வேலையிழந்த வேதநாயகர் வேதனையுற்றார். ஆயினும் அநீதியை எதிர்த்துப் போராட எண்ணினார். ஆவணங்களை மொழி பெயர்த்து அப்போதைய நீதிபதியிடம் கொடுத்த செய்தியை மாநில நீதி மன்றத்தார்க்குத் தெரிவித்து மனுவொன்று எழுதினார். மாதங்கள் பல கடந்தன. மறுமொழியொன்றும் கிடைக்கவில்லை. மீண்டும் அதே

உண்மைகளை விளக்கிக் கூறி மற்றொரு மனுவையும் அனுப்பினார். அது சென்று சேர்ந்தபோது, காலஞ்சென்ற நீதிபதியின் பெட்டியில் இருந்த ஆவணங்கள் மாநில நீதி மன்றத்திற்கு அந்நீதிபதியின் உறவினரால் அனுப்பப்பட்டு வந்து சேர்ந்து, வேதநாயகரின் கூற்றுக்குச்சான்று பகர்ந்தன. மாநில நீதி மன்றத்தார் வேதநாயகர் குற்றமற்றவர் எனக் கண்டு, அவரை மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளுமாறு மாவட்ட நீதிபதிக்கு ஆணை அனுப்பினர்.

அப்போது நீதிபதியாயிருந்தவர் மேஸ்தர் கவிண்டன் என்பவர். அவர் பண்பாட்டில் கிரீன்வேயைவிடக் கீழானவர். ஆகவே, அரசு ஆணையை மதித்து வேதநாயகரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளாமல், அவர் நோயுற்றவர் என்றும், மொழிபெயர்ப்பு வேலைகளைத் தாம் செய்ய இயலாமல் மற்றொருவரின் துணையுடனே செய்தவர் என்றும் காரணம் காட்டி மேலதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார். அவரது முடிவை ஏற்றுக்கொள்ளாத மேலதிகாரிகள், அவருக்கு ஓய்வு கொடுத்து அவரை இலண்டனுக்கு அனுப்பிவிட்டு, மேஸ்தர் ஆரிஸ் என்ற நல்லாரை நீதிபதியாக நியமித்தனர். ஆரிஸ் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் வேதநாயகரை அழைத்து வேலையில் அமர்த்திக் கொண்டார்.

மாவட்ட நீதிபதி :

சில ஆண்டுகட்குப்பின், 1856இல் மாவட்ட நீதிபதி (Dt. Munsiff) வேலைக்கு மனுக்கள் கோரப்பட்டன. நம் வேதநாயகர் மனு செய்தார். மற்றும் அறுபதுக்கு மேற்பட்டோரும் மனுச் செய்தனர். மனுக்களை ஆய்ந்த அரசினர் மூவரை மட்டுமே தேர்ந்தெடுத்தனர். அந்த மூவரில் ஒருவர் நம் வேதநயாகர் என்பதை விளம்பத் தேவையில்லை. மற்ற இருவர்: சென்னைள உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த முத்துசாமி ஐயரும், திருவாங்கூர் திவானாக இருந்த ரகுநாதராவும் ஆவர். நம் வேதநாயகர் முதலில் 1857இல் தரங்கம்பாடியில் மாவட்ட நீதிபதியாகப் பொறுப்பேற்றார். பின்னர், 1859இல் சீர்காழிக்கு மாற்றப்பட்டார். ஓராண்ருக்கு பின் மாயூரத்திற்குமாற்றப்பட்டார். அங்கு 1872ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நீதிபதியாக வேலை பார்த்தார்.

“நீதியென்பது மதில்மேல் பூனை” என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறோம். துலாக் கோலின் ஊசிபோல ஒருபக்கமும் சாயாது நடுநிலையில் நின்று நீதி வழங்கப்பட வேண்டும் என்று அறநூல்கள் அறிவிக்கின்றன. ஆயினும் அவ்வாறு நீதி வழங்கப்படுகிறதா என்பது பெரும் கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. நீதிமன்றங்கள் நேர்மையாக இயங்க இயலாமைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன வழக்குத் தொடுப்பவர்கள், பல பொய்யுரைகளையும் புனைந்துரைகளையும் சேர்த்தே வழக்குத் தொடுப்பார்கள். அவர்களின் சார்பாக வாதாடுகின்ற வழக்குரைஞர்களும், வாக்கு வன்மையால் மெய்யைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் மாற்றுவார்கள். சாட்சிகளாக வருகின்றவர்களோ. பொய் சொல்லும்படியாகப் போதனை செய்யப்பட்டு அழைத்து வரப்படுவார்கள். இவர்களின் கூற்றுகளை அலசி, ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடிப்பது என்பது முயற்கொம்புதான். இவையெல்லாம் போதாது என்பதுபோவ,

நீதிபதிக்குக் கையூட்டு (இலஞ்சம்) கொடுத்துத் தம் சார்பாகத் தீர்ப்பளிக்கவேண்டுமென்று வேண்டுகிற 'பெரியவர்களும்' உண்டு. இவற்றிற்கெல்லாம் தப்பிப்பிழைத்தால்தான் நீதி என்று ஒன்று கிடைக்கும்.

நம் வேதநாயகர் நீதிபதியாக இருந்த காலத்திலும் இதே நிலைதான். நீதித்துறையில் நிலவியிருந்தது. ஆனாலும், இறைப்பற்றும், நற்பண்புகளும் நிறையப்பெற்ற வேதநாயகர் நல்ல நீதிநாயகராகவே விளங்கினார். தம்மிடம் வந்த வழக்குகளைத் தம் நுண்மாண் நுழை புலத்தால் நுணுகி ஆராய்ந்து உண்மையறிந்து தீர்ப்பு வழங்கினார். வழக்குரைஞர்களோ, கையூட்டோ அவரது நேர்மையைக் கெடுக்க அவர் இடந்தரவில்லை. ஆகவே, "அவரிடம் நீதிகிடைக்கும்" என்ற பேச்சு எங்கும் பரவியது, "ஏழைக்கு இரங்கிடும் வேதநாயகர் எப்போது வருவாரோ- கச்சேரிக்கு எப்போது வருவாரோ?" என்று ஒரு நாடோடிப் பாடலே தோன்றுமளவுக்கு நீதி அவரது நீதிமன்றத்தில் நிலைத்திருந்தது.

அவர் தீர்காழியில் வேலை பார்த்து வந்தபோது ஒரு வழக்கு அவரது நீதிமன்றத்தில் நெடுநாட்களாக நடைபெற்று வந்தது. வழக்கின் உண்மையை அறிய முடியாமல் அவரும் கவங்கலானார். அந்நிலையில் இறையுதவியை வேண்டத் தவறவில்லையவர். தீர்ப்பு வழங்கவேண்டிய நாளுக்கு முந்தைய நான் மாலையில், அவர் வீட்டிற்கு அவ்வழக்கைத் தொடுத்தவன் வாந்தான். நூறு (வெள்ளி) ரூபாய்கள் கொண்ட பணமுடிப்பு ஒன்றை அவரிடம் கொடுத்து தனக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று வேண்டினான். வழக்கின் உண்மையை அறிய, இறைவன் தளக்கு உதவிய முறையை எண்ணி வியந்தார் வேதநாயகர். இறைவனுக்கு நன்றி நவின்றார். வாதிக்கு மகிழ்வு தரும் மறுமொழியைச் சொல்லியனுப்பினார். மறுநாள் காலையில் வழக்கு மன்றத்திற்கு வந்திருந்த வாதியின் முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சிக்குக் கரையேயில்லை. ஆனால் வேதநாயகர் முந்தையநாள் மாலையில் நூறு வெண்பொற்காசுகள் உண்மையை வெளிப்படுத்திய வகையை விளக்கிக் கூறி வாதிக்கு எதிராகத் தீர்ப்பு கூறியதோடு, அத்தொகையை வழக்குச் செலவுகளுக்காக எதிரிக்கு அளித்தார். தனக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்றெண்ணி நடுங்கிய வாதியை எச்சரிக்கை செய்து மன்னித்து அனுப்பினார். இந்நிகழ்ச்சி அவரது புகழை எங்கும் பரப்பியது.

அவர் மாயூரத்தில் நீதிபதியாக இருந்தபோதும், இங்ஙனமே நேர்மையோடு பணியாற்றி வந்தார். இதனால் பிற நீதி மன்றங்களில் நீதி கிடைக்காது என்று அஞ்சிய பலர், தம் வழக்குகளை மாயூரத்திற்கு மாற்றும்படி அரசியலாருக்கு மனு செய்தனர். இவற்றையெல்லாம் ஆராய்ந்த அரசியலார், நம் வேதநாயகரை முதல்தர நீதிபதியாக உயர்த்தி உத்தரவு பிறப்பித்தனர். அவருடன் நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற இருவரும் உயர் பதவிகளையே நோக்கமாகக் கொண்டு உழைத்து உயர்ந்த நேரத்தில், நம் வேதநாயகர் நீதியொன்றையே குறிக்கோளாகக் கொண்டு நிம்மதியடைந்தார்.

வேலையினின்று விலகல் :

வேதநாயகர் நேர்மையாக நீதி வழங்குவதையும் அவர் புகழ் வளர்ந்தோங்குவதையும் விரும்பாதபுல்லர் பலர் இருந்தனர். அவர்கள் அவரின் வேலைக்கு உலை வைக்கக் காலங்கருதிக் காத்திருந்தனர். அவர்களுக்கு வாய்ப்பாக நெல்சன் என்ற நீதிபதி ஒருவர் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் நேர்மையற்றவர், நல்லெண்ணம் இல்லாதவர். புறங்கூற்றைப் பொருட்படுத்தும் பொல்லாதவர். அவர் பொய்யர்களின் புளைந்துரைகளை நம்பி வேதநாயகரை வேலையினின்று தொலைக்க விரும்பினார். முன்னறிவிப்பு இன்றி மாயூரம் நீதிமன்றத்தைச் சோதனை செய்ய ஒருநாள் வந்தார். உடல் நலங்குன்றியிருந்த வேதநாயகர், அன்று விடுப்பு எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்தார். நீதிபதி நெல்சனோ, அலுவலக ஆவணங்களைச் சோதனை செய்து, இல்லாத பல குற்றங்களைக் கண்டுபிடித்துக் குறிப்பெடுத்துக் கொண்டு, தனது தலைமையிடமாகிய கும்பகோணத்திற்குச் சென்றார். அக்குற்றச் சாட்டுகளுக்கு நேரில் வந்து விளக்கம் தருமாறு வேதநாயகருக்கு ஆணையிட்டார். அதனைப் பெற்ற வேதநாயகர், அவை குற்றமில்லையென்பதை விளகக் கடிதம் ஒன்றைத் தயாரித்து நெல்சனுக்கு அனுப்பினார். உடல்திலை காரணமாக, அவர் நேரில் செல்லவில்லை. நேரில் வந்து தம்மைக் காணாது புறக்கணித்ததைப் பெருங்குற்றமாகக் கருதிய நெல்சன், அவர் விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையல்ல என்றும், அவரை வேலையினின்றும் விலக்கவேண்டும் என்றும் அரசியலாருக்குப் பரிந்துரை செய்தார்.

வேதநாயகர் குற்றமற்றவர் என்று அரசியலார் அறிந்திருந்தாலும், வெள்ளையனான ஒரு மேலதிகாரிக்கு மதிப்பு தரவேண்டும் என்பதற்காக, வேலையினின்று தாமே விலகிச் கொள்ளுமாறும் ஆயுட்காலம் முழுவதும் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளுமாறும் வேதநாயகருக்கு (Pension) அறிவுரை கூறிக் கடிதம் ஒன்றை வரைந்தனர். உடல் நலக்குறைவையும், குடும்பப் பொறுப்புகளையும், தமிழ்த் தொண்டு, பொதுநலத்தொண்டு ஆகியவற்றில் தனக்கிருந்த ஈடுபாட்டையும், ஆங்கில ஆட்சியில் நடைபெற்று வந்த அந்தப் போக்குகளையும்; மனத்தில் கொண்டு, வேலையிலிருந்து விலகிக்கொள்ள வேதநாயகர் விரும்பினார். ஆகவே, அரசியலாரின் அறிவுரைக்கு இணங்கி, ஓய்வூதியம் பெற்று, வேலையினின்றும் விலகிக் கொள்ள விரும்புவதாக விடை எழுதினார். நெறியற்ற நெல்சனோ, அவருக்கு ஓய்வூதியம் தருதல் கூடாது என்று தடை கூறினான். ஆயினும், அரசியலார் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இத்தகைய சூழ்நிலையில், பதினாறாண்டுகள் நல்ல நீதிநாயகராக விளங்கிய வேதநாயகர் 1872ஆம் ஆண்டு வேலையினின்றும் விலகினார்.

இல்லறம் :

“இல்லறமே நல்லறம்” என்றெண்ணி நம் வேதநாயகர் தம் 25 ஆம் அகவையில் (1851 இல்) இல்வாழ்வை மேற்கொண்டார். காரைக்காலை

சேர்த்த பாப்பம்மாள் என்பவரை மணந்தார். சிறிது காலத்திற்குப்பின், அவர் காலமாகவே, தன் தமக்கையான ஞானப்பூ அம்மாளின் மகள் இலாசர் அம்மையாரை இரண்டாம் தாரமாக ஏற்றார். சில ஆண்டுகள் கழித்து, அவர் இறையடி எய்தவே, புதுச்சேரியைச் சேர்ந்த மாணிக்கத்தம்மையாரை மணந்தார். அவர் ஞானப்பிரகாசம், சவரி முத்தம்மாள், இராசாத்தியம்மாள் என்ற மூன்று மக்களைப் பெற்றபின், முன்னவர் வழியே சென்றபோது புதுவை அண்ணுக்கண்ணம்மாளை மணந்தார். அவரது மறைவுக்குப் பின் அம்மாளம்மாள் என்பவரை மணந்தார். அவரும் தன் கணவனுக்கு முன்னதாகவே காலமாகிவிட்டார். இங்ஙனம் அருமை மனைவியர் ஐவரைப்பெற்றும், தம் இறுதிக் காலத்தில், தனியராகவே வாழ்த்தார் நம் தண்டமிழ் நாயகர்.

எனினும் அவரது இல்லறம் இனிதே இயன்றது. அவரைத் தேடி அவரது இல்லத்திற்கு வந்த விருந்தினர் எண்ணற்றவர். அவர்களையெல்லாம் இன்முகத்தோடு வரவேற்று, இன்சொல்கூறி, உண்டியும் உறையுளும் உவந்தளித்து ஓம்பினார் நம் வேதநாயகர், தமது வருவாயில் சிறுகச் சிறுகச் சேர்த்த தொகையைக் கொண்டு, மாயூரத்தில் ஒரு மாடி வீட்டை விலைக்கு வாங்கி, அதில் தம் இறுதிக் காலம்வரை வாழ்ந்து வந்தார். அவ்வீடு இதுபோழ்து. மாயூரம் பேருந்து நிலையத்தையொட்டி முதன்மைத் தெருவில் ஒரு கடையாக மாற்றப்பட்டுக் காட்சியளிக்கிறது.

தொண்டுகள்

. சட்டத்துறைத் தொண்டு:

வேதநாயகர் மொழி பெயர்ப்பாளராக வேலை பார்த்து வந்த காலத்தில் மாவட்ட நீதி மன்றங்களுக்கு மேலாணை நீதி மன்றமாக விளங்கிய மாநில நீதி மன்றத்தில் (Sadar- Court) வழங்கப்பட்ட தீர்ப்புகள் பல, மாவட்ட நீதி மன்றம் களில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டு வந்தன. அவ்வழக்கு விவரங்களும், அவை தொடர்பான சட்டங்களும் ஆங்கிலத்திலேயே இருந்ததால், ஆங்கில அறிவு போதிய அளவு இல்லாத வழக்குரைஞர்களும் மக்களும் அவற்றை அறியக்கூடவில்லை.

ஆகவே 1805 ஆம் ஆண்டுக்கும் 1861ஆம் ஆண்டுக்கும் sடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த முதன்மையான சட்டங்கள், வழக்குகள், தீர்ப்புகள் ஆகியவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார். அலுவல் ஒழிந்த ஓய்வுநேரங்களிலேயே இதனைச் சிறுகச்சிறுகச் செய்து முடித்தார். இதனை, அவர் மாயூரம் நீதிபதியாக இருந்த காலத்தில் : 1862இல் '("சித்தாந்த சங்கிரகம்") (சித்தாந்த = சட்டம்; சங்கிரகம் = தொகுப்பு) என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டார். தமிழ் மொழியில் வெளிவந்த முதல் சட்டத்துறை நூல் என்ற பெருமை இதற்கேயுண்டு.

தமிழிசைத் தொண்டு :

அக்காலத்தில்–வேதநாயகர் மொழி பெயர்ப்பாளராக இருந்த காலத்தில்– தமிழ் நாட்டில் இசையரங்குகளில்– கச்சேரிகளில்–பாடப்பட்ட இசைப்பாடல்கள் தமிழ் மொழியில் அமைந்தவையல்ல. திருவாரூர் இசை மும்மணிகளான தியாகராயர், முத்துசாமி தீட்சதர், சாம சாத்திரி ஆகியோர் தெலுங்கு மொழியில் இயற்றிய கீர்த்தனைகளே அவை. தமிழ் நாட்டில் தமிழிசையில் பாடப்படும் தமிழ்ப் பாடல்கள் இல்லையே என்று தமிழ்ப்பற்று மிக்க வேதநாயகர் வேதனையுற்றார். இதனைப் போக்கத் தாம் ஏதேனும் செய்ய இயலுமா என்று எண்ணினார். தாமே இசைப் பாடல்கள் இயற்றித் தமிழிசைத் துறைக்குத் தொண்டு செய்ய விரும்பினார். இசையறிவு இல்லாத தன்னால் இசைப் பாடல்கள் இயற்ற இயலாமையையும் எண்ணினார். அதனால், இசைப் புலவர் இருவரிடம், தன் ஓய்வு நேரத்தில் இசை பயின்றார். பின்னர், இசைப் பாடல்களை–கீர்த்தனங்களைத்– தமிழில் இயற்றினார். அவற்றை இசையரங்குகளில் பாடச் செய்தார். அவை தெலுங்கு கீர்த்தவங்களைவிடச் சிறந்திருப்பதைப் பலரும் ஏற்றுக்கொள்ளச் செய்தார். தமிழில் இசைப் பாடல்களை இயற்ற முடியாது என்றிருந்த குறையைப் போக்கினார். தொடர்ந்து முயன்று பல இசைப்பாடல்களை உருவாக்கித் தமிழுலகுக்குத் தந்தார்.

இங்ஙனம், இயற்றப்பட்ட 200க்கு மேற்பட்ட கீர்த்தனைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கினார். அவை மக்கள் அனைவரும் சாதி, சமய வேறுபாடின்றிப் பாடி மகிழத்தக்கவை. எனவே, அந்நூலுக்குச **“சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்”** எனப் பெயரிட்டு, அதனை 1878இல் வெளியிட்டார். இத்தொகுதியில், குடும்ப சபந்தமான கீர்த்தனைகள், இதோப தேசக் கீர்த்தனைகள் என்பன போன்ற உட் பிரிவுகளும் உண்டு. கிறிஸ்து சமயச் சார்பாகத் தாம் பாடிய பல கீர்த்தனைகளைத் தொகுத்து ஒரு தனி நூலாக்கினார். அதற்குச் **“சத்திய வேத கீர்த்தனைகள்”** எனப் பெயரிட்டு 1889இல் வெளியிட்டார்.

அவர் மொழி பெயர்ப்பாளராக இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட தமிழிசைத் தொண்டு, அவரது இறுதிக் காலம்வரை தொடர்ந்து இயன்றது. அவரின் இசைப்பாடல்ளை இன்றும் இசையரங்குகளிலும் வானொலியிலும் நாம் கேட்டு மகிழ்கிறோம்.

பெண்கள் முன்னேற்றம் :

சங்க காலத்தில் தமிழ்நாட்டில் ஆண்களைப்போல் பெண்களும் கல்வி கற்றுச் சிறந்திருந்தனர். கவி பாடும் திறமையும் பெற்று விளங்கினர். ஆனால் முஸ்லிம் ஆட்சி இங்கு பரவிய காலத்தில் ‘பெண்ணடிமை’ ஏற்பட்டது. “பெண்கள் படித்தல் கூடாது;படித்தால் கெட்டு விடுவார்கள்” என்ற பல்லவி எங்கும் பாடப்பட்டது. வாழ்வில் சரி பங்காகிய பெண்களும் கல்வி கற்று அறிவுடையோராக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் நற்குண, நற்செயல்கள் உடையோராகஇருக்க வேண்டியதன் அவசியத்தையும் வேதநாயகர் உணர்ந்தார்.

இத்தகைய பெண்கள் முன்னேற்றத்தின் இன்றியமையாமையைப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் அறிவிக்க விரும்பினார். பெண்களுக்கு

அறிவுறுத்த வேண்டிய செய்திகளை இனிய இசைப் பாடல்களாக எழுதி, "**பெண்மதி மாலை**" என்ற சிறு நூலாக 1809 ஆம் ஆண்டில் வெளியிட்டார். பெண்கள் முன்னேற்றத்தில் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்தி "பெண் கல்வி", "பெண் மானம்" என்ற இரு உரைநடை நூல்களை எழுதி, அவற்றை ஒரே நூலாக, 1870இல் வெளியிட்டார். பெண்கள் கல்வி கற்க வசதியாக, 1869இல் பெண்களுக்கெனத் தனிப்பள்ளியொன்றை மாயூரத்தில் தன் சொந்த முறையில் தொடங்கி நடத்தி, பின்னர் தான் நகர மன்றத் தலைவரானபோது அதனை நகராட்சியின் பொறுப்பில் ஒப்படைத்தார்.

இங்ஙனம், பெண்கள் முன்னேற்றத்திற்காக இவர் அமைத்த அடிப்படையின் மீதுதான். திரு.வி.க., பாரதியார் போன்ற பிற்காலப் பெரியோரின் தொண்டுகள் தூண்களாக எழுத்து, இன்று மாதர் முன்னேற்றம் ஒரு பெரும் மாளிகையாகி நிற்கிறது.

தமிழில் புதினங்கள் இயற்றுதல் :

ஆங்கிலம் முதலிய அயல் மொழிகளில் உரைநடையில் அமைந்த புதுமைக் கதைகள் இயற்றப்பட்டிருப்பதையும் தமிழ மொழியில் அத்தகைய கதைகள் தோன்றாமையையும் வேதநாயகர் வேதனையோடு நோக்கினார். தமிழ் உரைநடை, பண்டிதர் நிலையிலிருந்து பாமரர் நிலைக்கு வர அத்தகைய கதை நூல்கள் பெருக வேண்டியதன் தேவையையும் எண்ணினார்.

இதனைத் தாமே செய்து, பிறருக்கும் வழிகாட்ட எண்ணினார். நீதி நூலிலும், பெண் கல்வி முதலிய பிற நூல்களிலும் தான் வெளியிட்டிருந்த அரிய கருத்துக்களைக் கதை மாந்தர்களின் பண்புகளாக்கி ஒரு புதினக் கதையைப் புனைந்தார். அதனைப் "**பிரதாப முதலியார் சரித்திரம்**" என்ற பெயரில் 1879இல் வெளியிட்டார். அதனை இயற்ற தேர்ந்த காரணத்தையும் நோக்கத்தையும் அதன் முதற் பதிப்பிற்கு எழுதிய ஆங்கில முன்னுரையில் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதனைத் தொடர்ந்து, அதனைப் போன்ற ஆனால் அளவில் சற்று சிறிய புதினம் ஒன்றையும் எழுதி, "**சுகுண சுந்தரி**" என்ற பெயரில் 1887 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

இவையிரண்டுமே, தமிழ் மொழியில் அமைந்த முதல் புதினக் கதைகளாகும். இன்று தமிழில் உரைநடையில் இயற்றப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான புதினக் கதைகளுக்கு இவைகளே முன்னோடிகளும் வழிகாட்டிகளுமாகும் இதனால் இவரைத் "**தமிழ்ப் புதினத்தின் தந்தை**" என்று போற்றுவதும் பொருத்தும்.

நீதி நூல்:

மக்களுக்கு நீதியை அறிவிக்கும் நூல்கள் தமிழ் மொழியில் பல உண்டு. அவற்றுள் திருக்குறள் பெரிதும் போற்றப்படுகிறது. ஆயினும், நீதிகளை அறிவிக்கும் நூல் எதுவும் தன் காலத்தில் தோன்றாமையை வேதநாயகர் நினைத்தார். கையூட்டு - இலஞ்சம் - போன்ற பிற்காலத்திய தீய பழக்கங்களைக்கடிய ஒரு நீதிநூல் தேவை என்பதையும்

எண்ணினார். . காலத்திற்கேற்ற தேவையாகிய அத்தகைய நூலொன்றைத் தானே இயற்ற முன் வந்தார். தனக்கு நேரம் கிடைத்தபோதெல்லாம் செய்யுட்கள் இயற்றிச் சேர்த்தார். இறுதியில் 400 செய்யுட்கள் கொண்ட அந்நூலை,**"நீதி நூல்"** என்னும் பெயரில் 1859 இல் தான் சீர்காழியில் நீதிபதியாக இருந்தபோது வெளியிட்டார்.

அதனைப் படித்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் உள்ளிட்ட, தமிழறிஞர் அனைவரும் அவரைப் பாராட்டினார்கள். மகா வித்துவான் அவர்கள், அதனை மேலும் சிறிது விரிவு செய்யக் கோரினார். ஆகவே, வேதநாயகர் மாயூரத்தில் நீதிபதியாக இருந்த காலத்தில் மேலும் 200 செய்யுட்களை எழுதிச் சேர்த்து, 600 பாடல்களைக் கொண்டதாகத் திருந்திய பதிப்பாக, 1860 இல் வெளியிட்டார். நீதிபதி, "நீதி நூல்" இயற்றியது நிறை பொருத்தம் உடையதே!

கிறிஸ்து சமயச் சார்பு நூல்கள் :

வேதநாயகர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின், வேலை போயிற்றேயென்று வேதனைப்படவில்லை. மாறாக, தனக்குத் தன் வாழ்நாள் முழுவதும் கருணை புரிந்து வந்த, மேலும் கருணை காட்டி வழி நடத்தக் காத்திருந்த இறை இயேசுவையும், அவரை ஈன்ற அன்னை, கன்னி மரியையும் பெரிதும் நினைந்தார். நீதிபதியாக வேலை பார்த்தபோது, இறைவனை எண்ணிப் போற்ற நேரம் போதாக் குறையை நினைத்து, "அப்பா இதென்ன அதிகாரம் ஐயோ! எப்போதும் பக்தி செய்ய இல்லையே நேரம்" என்று நெஞ்சுருகிப் பாடியவருக்கு இப்போது நிறைய நேரம் கிடைத்தது.

ஆகவே, இறைவனின் திருவருளை நினைந்து, **"திருவருள் மாலை"** **"திருவருள் அந்தாதி"** என்ற செய்யுள் நூல்களையும், தேவ அன்னையின் அருளைப் போற்றித் **"தேவ மாதா அந்தாதி,** என்ற செய்யுள் நூலையும் யாத்து, 1873 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

ஒருமுறை தம் தொழில் தொடர்பாகச் சென்னை சென்றிருந்த போது, சென்னையிலிருந்து 12கல் தொலைவிலிருந்த பெரியபாளையம் சென்று, அவ்வூர் பெரியநாயகி மாதா பேரில் ஒரு பதிகம்-10 பாக்கள் பாடினார். அதனையும் அத்தொகுப்பில் சேர்த்து வெளியிட்டார்.

பின்னர் தேவனைத் தோத்தரிக்கும் மாலையாக, "தேவ தோத்திர மாலை" என்ற செய்யுள் நூலையும் எழுதி, 1889ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவை இறையன்பில் ஈடுபட்ட அவரது இதயத்தின் எதிரொலிகளாக இலங்குகின்றன. இவற்றைப் படிப்பவர்க்கும் இதே உணர்வு இன்றும் ஏற்படும்.

தனிப் பாடல்கள் :

இவை தவிர, வேதநாயகர் தன் நண்பர்களுடன் உரையாடியபோதும், அவர்களுக்குக் கடிதங்கள் - சீட்டுக்கவிகள்- எழுதிய போதும், திருமண நிகழ்ச்சிகளின் போதும், பல்வேறு பிற நிகழ்ச்சிகளின் போதும், பாடிய

பாடல்கள் கணக்கற்றவை. அவற்றைத் தொகுத்து வெளியிட்டால். அவை ஒரு நூலாகக் கூடும்.

பொதுநலத் தொண்டு:

நீதிபதிப் பொறுப்பிலிருந்து விலகிய வேதநாயகர், 'நிம்மதி'யாக வீட்டிலிருக்கவில்லை. தன்னால் இயன்ற அளவு போதுநலத் தொண்டும் செய்தார். மாயூரத்தைச் சேர்த்த பெரியோரி பலர், அவரை அந்நகர் மன்றத்தின் தலைவராக்கினர். அவரும் அவர்களின் அன்பைத் தட்ட முடியாமல் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டார். தனது பதவிக் காலத்தில் சாலைகள் அமைத்தல், கல்விச் சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதியளித்தல், துப்புரவு, சுகாதாரம் பெருகச் செய்தல் முதலிய பல்வேறு துறைகளிலும் பாராட்டத்தக்க பணிகளைச் செய்து, "பொது நலத்தொண்டு செய்வது எப்படி?" என்று பிறருக்கு அறிவுறுத்தினார்.

வறுமைக் காலத்துத் தொண்டு:

1876ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகள் மாயூரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடும் பஞ்சம் ஏற்பட்டது. முதல் ஆண்டில் வறட்சியும், இரண்டாம் ஆண்டில் வெள்ளமும், மூன்றாம் ஆண்டில் விட்டில் பூச்சிகளும் இப்பெரும் பஞ்சத்திற்குக் காரணமாயின. இப்பஞ்ச காலத்தில் மாண்டோர் எண்ணிக்கை எண்ணி மாளாது. மனித உயிர்கள் பட்ட பாட்டைக் கண்டு மனம் பதறினார் வேதநாயகர். சோற்று வளமுடைய சோழநாட்டில், சோறில்லாது மக்கள் வருந்தும் நிலைமை நீக்க நினைந்தார்

பெரும் நிலக்கிழார்கள். பெருஞ் செல்வர்கள், சைவ மடத்துத்தலைவர்கள் ஆகியோர் அளித்த உதவிகளுடன் தன் சேமிப்பையும் சேர்த்து, மாயூரத்திலும், சுற்றுப்புறச்சிற்றூர்களிலும் கஞ்சித் தொட்டிகள் வைத்து நடத்தினார். கத்தோலிக்க சமய உலகத் தலைவராகிய பாப்பரசர் மூலமாக ஐரோப்பிய நாட்டு உதவியையும் பெற்று உதவினார். அம்மூன்றாண்டுகளும் முழு நேரப் பணியாகச் செய்தார். இவரது இத்தகு தொண்டுகளைக் கண்டு வியந்து, "பரனைப் பாடிய வாயால் ஒரு நரனைப் பாடமாட்டேன்" என்று நோன்பு கொண்டிருந்த முடிகொண்டான் கோபாலகிருட்டின பாரதியார், விதிவிலக்காக, "நீயே புருஷ மேரு" என்று தொடங்கும் பாடல்-கீர்த்தனை-ஒன்றைப் பாடிப் பாராட்டினார். இக்காலத்தில், பஞ்சத்திலிருந்து மக்களைக் காக்குமாறு இறைவனை வேண்டி வேதநாயகர் பாடிய, "பஞ்சம் தீர் ஐயா, உம்மையன்றித் தஞ்சம் ஆர் ஐயா" என்று தொடங்கும் பாடல் போன்ற பாடல்களும், பிற தனிப் பாடல்களும் தனிச் சிறப்புடையவை.

நல்லறிஞர் நட்பு :

வேதநாயகர் வாழ்ந்தகாலத்தில், தமிழகத்தில் வாழ்ந்த நல்லறிஞர் பலருடனும் தொடர்பும் நட்பும் கொண்டிருந்தார். அவருள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர், திருசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையாவார். இவரது நட்பை இவர் வாழ்ந்த

காலத்து மட்டுமன்றி இவரது இறப்பிற்குப் பின்னும் நம் வேதநாயகர் போற்றி வந்தது புதுமையேயாகும்.

வேதநாயகர் மொழி பெயர்ப்பாளராக விளங்கிய காலத்தில், திருச்சிராப்பள்ளியில் மகாவித்துவான் அவர்கள் மிகச் சிறந்த தமிழ்ப் புலவராய் விளங்கினார். தமிழ் இலக்கண இலக்கியங்களில் வல்லவராய் விளங்கியதோடு, கவி பாடும் திறமையும் பெற்றுத் திகழ்ந்தார். இவரது நட்பு நம் வேதநாயகருக்கு எதிர்பாரா வகையில் கிட்டியது. பின்னர் அது வளர்பிறை போல் வளர்ந்து முழுமை பெற்றது.

வேதநாயகர் திருச்சியில் வாழ்ந்த காலத்து இருவரும் அடிக்கடி கண்டு அளவளாவி மகிழ்ந்தனர். தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். வேதநாயகர் தரங்கம்பாடியில் இருந்த குறுகிய காலத்து மட்டுமே இவ்விருவரும் சிறிது பிரிந்து வாழ நேர்ந்தது. ஆனால் வேதநாயகர் சீர்காழிக்கு வந்தபோது, மகா வித்துவானைச் சீர்காழிக்கு . வந்துவிடுமாறு அழைத்தார். அவரும் நண்பரின் அழைப்பையேற்றுச் சீர்காழிக்கு வந்து சேர்ந்தார். "பிரித்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?" என்பது போல, அவ்விருவரும் அங்கு ஒருங்கு ஆற்றிய பணிகள் உயர்வானவையே!

மகா வித்துவான் அவர்கள் அங்கிருந்தபோது, சீர்காழி இறைவன் மீது "சீர்காழிக் கோவை" என்ற சிறந்த ஒரு நூலைப் பாடினார். அதனை அக்கோயிலிலே கூடிய அவையில் அரங்கேற்றினார். அவ்வரங்கேற்றத்திற்கு நம் வேதநாயகரே தலைமையேற்று, அது சிறப்புற நிகழ்வுறச் செய்ததோடு. அந்நூலைப் போற்றிச் சாற்றுக் கவிகள் பாடினார். மகாவித்துவான் அவர்கள், வேதநாயகர் மீதும் ஒரு கோவை பாடினார். அவரது பிறப்பிடத்தின் பெயரால், அதற்குக் "குளத்தூர்க் கோவை" எனப் பெயரிட்டார். அகப் பொருள் துறை இலக்கணங்கள் அமைய இயற்றப்பட்ட 438செய்யுட்கள்கொண்ட அந்நூலில், அவர் வேதநாயகரின் விழுமிய புகழை விளம்பியிருக்கிறார்.

பின்னர், மகா வித்துவான் அவர்கள், திருவாவடுதுறை ஆதீனத்திற்கு அருகில் இருக்கக் கருதி மாயூரத்திற்குச் சென்றபோது அவரைப் பிரிய நேர்ந்தமைக்கு வேதநாயகர் வருந்தினார். தனக்கு மாயூரத்திற்கு மாற்றம் கிடைத்த போது மகிழ்ந்தார். அவரோடு உறவாடியும் உரையாடியும் உவகை கொண்டார். 1-2-1876 இல் மகாவித்வான் அவர்கள் காலமானபோது ஆராத் துயரில் ஆழ்ந்தார். அவரது குடும்பத்தாருக்கு தன்னால் இயன்ற வகைகளில் எல்லாம் உதவினார். மாயூரம் துணை ஆணையரிடம் பரிந்துரைத்து, அவரது மகனுக்குக் கணக்கர் வேலை பெற்றுத் தந்தமை அவற்றுள் குறிப்பிடத் தக்கதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்களிலே சிறப்பிடம் பெறுபவர், கிறிஸ்தவக் கம்பர் என்று போற்றப் பெறும் ஹென்றி ஆல்பிரட் கிருட்டிணப் பிள்ளையாவார். பாளையங்கோட்டைக் கல்லூரியிலே தமிழாசிரியப் பணியாற்றிய அவர், தாம் யாத்த "இரட்சணிய யாத்திரிகத்தை" அச்சிட, சென்னை செல்லவிருப்பதை அறிந்த நம் நாயகர், சென்னை செல்லும் வழியில், மாயூரத்தில் தன்னைக் கண்டு, தன்னுடன் சில நாட்கள் தங்க வேண்டும் என்று கோரி

அவருக்குக் கடிதம் எழுதினார். வேதநாயகரைப் பற்றிக் கேள்வியுற்றிருந்த கிருட்டினப் பிள்ளையும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்து மாயூரம் வந்தார். அவரைத் தன் இல்லத்தில் தங்கச் செய்து இனிதாக விருந்தோம்பியதோடு அமையாமல், மாயூரத்திலிருந்த மகாவித்துவான் உள்ளிட்ட தமிழறிஞர் அனைவரையும் ஓர் அவையாகக் கூட்டி அவர்கட்ருக் கிறிஸ்தவக் கம்பரை அறிமுகம் செய்துவைத்து அவர் பாடல்களை அவர் பாடிக் காட்டி விளக்கம் செய்ய வாய்ப்பளித்தார். கிறிதைவக் கம்பரின் கவித்தேனை மாந்திக் களித்தார், மகாவித்துவான் முதலியவர்களுடன் சேர்ந்து கிருட்டினப் பிள்ளைக்குப் புகழாரம் சூட்டினார். இந்நிகழ்ச்சிக்கு முன் ஒருவரை யொருவர் நேரில் பார்த்தறியாத இவ்விருவரும், அதுமுதல் உணர்ச்சி யொத்த நண்பராயினர்.

மாயூரத்தை அடுத்திருந்த திருவாவடுதுறை மடத்துத் தலைவராகிய சுப்பிரமணிய தேசிகர், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பாடிய முடிகொண்டான் கோபாலகிருட்டின

பாரதியார், புதுக்கோட்டை மாவட்டத் தலைமை நீதிபதியாயிருந்த, யாழ்ப்பாணம், சி. வை. தாமோதரம் பிள்ளை. புதுவை வித்துவான் சவரிராயலு நாயகர் முதலாக, நம் நாயகரோடு நட்பு பாராட்டி, அவரோடு நேரிலும், கடிதங்கள் மூலமாகவும் தொடர்புகொண்ட நல்லறிஞர், பட்டியல் மிகவும் நீளும். அவர்களெல்லாம் நம் நாயகரைப் பற்றியும், அவர் நூல்களைப் பற்றியும், அவர் தொண்டுகளைப் பற்றியும் பாராட்டி உரைத்த உரைகளும், பாடிய பாடல்களும் ஒரு தனி நூலாகும் தகுதியுடையவை.

நிறை வாழ்வு பெறுதல்:

இங்ஙளம் நல்லறிஞர் பலரின் நட்புக்கும், பாராட்டுக்கும் உரிய பண்பாளர், நல்ல நீதியாளர், நற்றமிழ்ப் புலவர், உரைநடை வேந்தர், புதின முதல்வர், பெண்ணினத்திற்குப் பெருமை தந்தவர், உண்மைக் கிறிஸ்தவர் ஆகிய நம் வேதநாயகருக்கும் வாழ்வின் இறுதி நெருங்கியது. மண்ணில் எவர்க்கும் மரணமிலாப் பெருவாழ்வு வாய்க்காதன்றோ? . வேதநாயகர் தம் இறுதிக் காலத்து, ‘மகோதரம்’ (Dropsy) என்ற வீக்க நோயால் வேதனைப்பட்டார். மருத்துவம் பயனளிக்கவில்லை. தனது இறுதிநேரம் நெருங்குவதை உறுதியாக உணர்ந்தார். திருமறை குருக்களைத் தன் இல்லத்திற்கு அழைத்து, இறுதித் திருவருட் சாதனங்களைப் பெற்றார். தனது நல்ல நண்பர்களுக்கும் தனக்கு உதவியவர்களுக்கும் உரிய வகையில் நன்றி தெரிவித்துக் கடிதங்கள் எழுதி அவர்களிடமிருந்து விடை பெற்றார். 1889 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 21 ஆம் நாள் இரவு 11 மணிக்கு மண்ணுலகை நீத்து விண்ணுல எய்தினார். அவரது ஆன்மா இறைவனோடு நிறை வாழ்வு வாழ்வதாக!

நன்றி: வேதநாயகம் பிள்ளை நினைவுக் குழு

https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0654.html

வாழ்க்கை வரலாறுகள்

மாயூரம் வேதநாயகம் பிள்ளை

https://ta.wikibooks.org/wiki/%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88_%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%82%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%B5%E0%AF%87%E0%AE%A4%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88

மாயூரம் வேதநாயகம் பிள்ளை வாழ்க்கை வரலாறு

வேதநாயகம்பிள்ளை திருச்சிராப்பள்ளிக்கு அடுத்துள்ள குளத்தூரில் சவரிமுத்துப் பிள்ளைக்கும் ஆரோக்கிய மரியம்மாளுக்கும் புதல்வராக 1826-ஆம்

ஆண்டு பிறந்தார். இவர் பல மொழிகளைக் கற்றறிந்தார். இவர் தரங்கம்பாடி, சீர்காழி, மயிலாடுதுறை (மாயூரம்) ஆகிய இடங்களில் நிகரற்ற

நீதிபதியாகப் பணியாற்றினார்.

இவர் தமிழில் அரிய பல நுல்களை இயற்றியுள்ளார்.அவற்றுள் சில: நீதி நூல், பெண்மதிமாலை, பிரதாபமுதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி

பக்தி நூற்களாகிய திருவருள்மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, பெரியநாயகி அம்மன் பதிகம், தேவதோத்திரமாலை, மற்றும்

அனைத்துச் சமயத்தினரும் பாடுவதற்குரிய அரும்பெரும் கருத்துக்கள் கொண்ட சர்வ சமய சமயக் கீர்த்தனைகள்;

அறநெறியையும் ஆன்மீகத்தையும் தம்கீர்த்தனைகள் மூலம் மக்களிடம் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார் விற்பன்னர் வேதநாயகம்

பிள்ளை. இவர் இயற்றிய சர்வசமயக் கீர்த்தனைகளில் சில முதல்தரமான இசையரங்குகளில் முதல்தரமான இசை வல்லுநர்களால் பாடப்பெற்றுச்

சிறப்படைந்துள்ளன.

எடுத்துக்காட்டுகள் :

கருணாலய நிதியே - இராகம் : இந்தோளம்

கருணாசாகரா - இராகம் :அடாணா

தயைபுரிய இன்னும் தாமதமா? : இராகம் மலைய மாருதம்

தருணம், தருணம் : இராகம் கத்தசாவேரி

போனது போகட்டும் : இராகம் : சுருட்டி

மனமேநீ ஈசன் நாமத்தை : இராகம் : குந்தளஹாளி

பரப்பிரம்மமே : இராகம் : சாமா

இன்னமும் தாமதமேன் ? : இராகம் :தேவமனோஹரி

இந்தவரம் தருவாய் : இராகம் :கரகரப்பிரியா

ஜாலம் செய்வதேதோ : இராகம் : வகுளாபரணம் -இன்னும் பல.

தமிழிசைப் பேராய்வாளர் தஞ்சை மு.ஆபிரகாம் பண்டிதர் 1800 பக்கங்களுக்கு மேற்பட்ட ஒப்பற்ற தனது ஆய்வு நூல் கருணாமிர்தசாகரத்தில்,

வேதநாயகம் பிள்ளையைப்பற்றிக் கூறியுள்ளதாவது: “வேதநாயகம் பிள்ளை சங்கீத சாகித்திய வித்துவான். வீணை வாசிக்கத் தெரிந்தவர். இவர்

நிறையக் கீர்த்தனைகள் எழுதியுள்ளார்.”

இத்தகைய சிறப்புப்பெற்ற இசையறிஞர் 1889 ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 21 ஆம் நாள் காலமானார்.

உதவி :- சென்னை தமிழிசைச் சங்க 73-ஆம் ஆண்டு மலர் (2015-16)

மாயூரம் வேதநாயகம் பிள்ளை பிறந்த நாள்

(அக்டோபர் 11, 1826 - சூலை 21, 1889)

https://namathu.blogspot.com/2019/10/11-1826-21-1889.html

Sundar P

மாயூரம் வேதநாயகம் பிள்ளை (அக்டோபர் 11, 1826 - சூலை 21, 1889) நீதியரசர் , கொடை வள்ளல் , தமிழ் ஆர்வலர் ,கவிஞர் ,பெண்ணியம் போற்றிய முற்போக்கு சிந்தனையாளர் , எழுத்தாளர். 1878இல் பிரதாப முதலியார் சரித்திரம்என்னும் புதினத்தை எழுதி, தமிழ் புதினஇலக்கிய உலகின் கதவைத் திறந்தவர் வேதநாயகர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளத்தூரில் பிறந்தார் வேதநாயகர். இவரது பெற்றோர், சவரிமுத்துப் பிள்ளை, ஆரோக்கியமரி அம்மையார். தொடக்கக் கல்வியைத் தமது தந்தையிடம் கற்றார் வேதநாயகம் ஆங்கிலம், தமிழ் மொழிக்கல்வியை திருச்சிராப்பள்ளி தியாகராசப் பிள்ளை என்பாரிடம் பயின்றார்.பிரெஞ்சு , வடமொழியினும் புலமை பெற்றார்.நீதிமன்ற ஆவணக் காப்பாளராக திருச்சி நீதிமன்றத்தில் 1848-ஆம் ஆண்டு பணியிலமர்ந்தார்.

பின்னர் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்றார். 1856இல் தரங்கம்பாடியில் முனிசீஃப் வேலையில் அமர்ந்தார். மாயவரம் (மாயூரம்)மாவட்ட முனிசீப்பாக 13 ஆண்டுகள் பணி புரிந்தமையால் இவரை மாயூரம் வேதநாயகம் பிள்ளை என்றே அழைக்கலாயினர்.மாயூரம்நகர் மன்றத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

தம்வாழ்நாளில் கவிதைகள் , கீர்த்தனைகள் .மொழிபெயர்ப்புகள், வரலாறு , புதினங்கள் , என்று16 புத்தகங்கள் எழுதியுள்ளார். தமிழின் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தையும் அப்போதே எழுதினார்.

இசையிலும் ஈடுபாடு கொண்டு வீணை இசைப்பதிலும் வல்லமை பெற்றிருந்தார். தெலுங்கு , வடமொழிப் பாடல்களையே பாடிக் கொண்டிருந்த இசை அரங்குகளில் , தமிழிசைபாடப்படல் வேண்டும் என்று வலியுறுத்தினார்.200 கீர்த்தனைகள் கொண்ட "சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் " என்ற இசைப் பாடல்நூலை எழுதி வெளியிட்டார். இவரது சமகாலத்தோரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இராமலிங்க வள்ளலார், திருவாவடுதுறை மடத்தின் மகாசன்னிதானம் சுப்பிரமணிய தேசிகர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோருடன் நட்பு பாராட்டி நெருங்கியிருந்தார்.

கி.பி 1805 முதல் கி.பி. 1861 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழியில் இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புகளை தமிழில் மொழி பெயர்த்து சித்தாந்த

சங்கிரகம் என்ற நூலாக 1862ல் வெளிட்டார். 1862, 1863 ஆம் ஆண்டுகளின் தீர்ப்புகளையும் வெளியிட்டார். இவ்வாறு தீர்ப்புகளை முதன் முதலில் தமிழில் மொழிபெயர்த்த தமிழறிஞர் வேதநாயகம் பிள்ளையே ஆவார்.தமிழகத்தில் 1876 - 1878 ஆண்டுகளில் பஞ்சம் தலைவிரித்தாடியது. அப்போது தமது சொத்துக்களையெல்லாம் தானம் செய்து ஏழை மக்கள் பசிப்பிணியைப் போக்கினார்.. பெண்கள் கல்வி கற்க வேண்டும் மிகுந்த அக்கறை கொண்டவர் வேதநாயகர்.

1869 இல் மாயூரத்தில் தம் சொந்தசெலவில் பெண்களுக்கெனத் தனிப்பள்ளியைத் தொடங்கி பெண்கள் கல்வி கற்க உதவினார். விதவை மறுமணம், குழந்தைத் திருமண ஒழிப்பு ஆகியவை குறித்து தமது படைப்புகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தமிழே மூச்சாய் ,பேச்சாய் ,செயலாய் வாழ்ந்த மாயூரம வேதநாயகம் பிள்ளை 1889 ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் நாள் தமிழுடன் கலந்தார்.

இந்து தமிழ் திசை

https://www.hindutamil.in/news/tamilnadu/713809-mayuram-vedhanayagam-pillai.html

மயிலாடுதுறையில் மாயூரம் வேதநாயகம் பிள்ளைக்கு மணிமண்டபம்:

தமிழக அரசுக்கு தமிழ் ஆர்வலர்கள் வலியுறுத்தல்



மயிலாடுதுறை காந்திஜி சாலையில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் புதர்களுக்கு நடுவே உள்ள மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் சிலை.

மயிலாடுதுறையில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் சிலை கண்டுகொள்ளப்படாத நிலையில் இருப்பதால் தமிழ் ஆர்வலர்கள் வேதனையடைந்துள்ளார். எனவே, அவருக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருச்சி அருகிலுள்ள குளத் தூரில் 1826-ல் பிறந்தவர் வேத நாயகம். இவரது தந்தை சவரி முத்து பிள்ளை, தாய் ஆரோக்கிய மரியம். திண்ணைப் பள்ளியில் பயின்ற இவர் 11-வது வயதிலேயே தமிழில் புலமை பெற்றார். ஆங்கி லத்தையும் கற்றுத் தேர்ந்தார்.

திருச்சி நீதிமன்றத்தில் ஆவணக் காப்பாளராக பணியைத் தொடங்கி, 1850-ல் திருச்சி மாவட்ட நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரானார். 1857-ல் தரங்கம்பாடி முன்சீப்பாக பணி யேற்றதன் மூலம் நாட்டின் முதல் இந்திய நீதிபதி என்ற பெருமையை பெற்றார். இதைத் தொடர்ந்து மயிலாடுதுறையில் மாவட்ட முன்சீப்பாக 13 ஆண்டுகள் பணி யாற்றியுள்ளார்.

மயிலாடுதுறையில் (அப்போது மாயூரம்) வாழ்ந்த காலத்தில் பெரும் புகழ் பெற்றதால் தனது பெயருக்கு முன்னாள் மாயூரம் என சேர்த்துக் கொண்டார்.

தான் அவ்வப்போது எழுதிய நீதிக்கருத்துகளை 1858-ம் ஆண் டில் தொகுத்து நீதி நூலாக வெளியிட்டார். ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழில் மொழிபெயர்த்து சித்தாந்த சங்கிரகம் என்ற நூலை எழுதினார். இதுவே தமிழில் முதலில் வெளிவந்த சட்ட நூலாகும். இதுமட்டுமல்லாது பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நூலை1879-ல் அச்சு வடிவில் வெளியிட்டார். இதுவே தமிழின் முதல் புதினம் என்ற சிறப்பைப் பெற்றது.

பெண்களின் முன்னேற்றத்துக் கென முதன்முதலில் தனி நூலை (பெண் கல்வி) எழுதியவர். மொழிபெயர்ப்பு நூல்கள், இசை நூல்கள், சமய நூல்கள் என 12 நூல்களை இவர் எழுதியுள்ளார்.

1872-ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், தேர்தலில் போட்டியிட்டு மயிலாடுதுறை நகராட்சித் தலைவராக பொறுப் பேற்றார். அப்போது தமிழகத் தின் முதல் பெண்கள் பள்ளியை தொடங்கினார்.

பல்வேறு பெருமைகளை கொண்ட மாயூரம் வேதநாயகம் பிள்ளை 1889-ம் ஆண்டு உயிரிழந் தார். மயிலாடுதுறை காந்திஜி சாலையில் உள்ள கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இதற்கு எதிரிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த இவரது சிலை, சில ஆண்டுகளுக்கு முன்னர் அங்கிருந்து மாற்றப்பட்டு, இந்த கல்லறைத் தோட்ட வளாகத் திலேயே ஒரு பீடம் அமைத்து நிறுவப்பட்டது. தற்போது அங்கு புதர்மண்டிக் காணப்படுகிறது.


முதல் இந்திய நீதிபதியாக பணியாற்றிய மாயூரம் வேதநாயகம் பிள்ளையை ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாமல் இருப்பது பெரும் வேதனையளிப்பதாகத் தெரிவிக்கின்றனர் தமிழ் ஆர்வலர் கள்.

இதுகுறித்து மயிலாடுதுறை வழக்கறிஞர் சங்கத் தலைவர் வேலு.குபேந்திரன் 'இந்து தமிழ்' நாளிதழிடம் கூறியது: தமிழக சட்டப்பேரவையில் நேற்று நடைபெற்ற செய்தித்துறை மானியக் கோரிக்கையின் போது பேசிய அமைச்சர் மு.பெ.சாமி நாதன், நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள் பலருக்கு அவரவர் சொந்த ஊர்களில் சிலை அமைக் கப்படும் அறிவித்துள்ளார்.

அதேபோன்று, தமிழுக்கும், நீதித்துறைக்கும் பல்வேறு பெருமைகளை தேடித் தந்த மாயூரம் வேதநாயகம் பிள்ளையை கவுரவப்படுத்தும் வகையில் தமிழக அரசு மயிலாடுதுறை நீதிமன்ற வளாகத்தில் அவரது சிலையை நிறுவவும், மயிலாடுது றையில் மணிமண்டபம் அமைத்து அவரது பெருமைகளை இளைய தலைமுறையினர் அறிந்து கொள் ளவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

பிரதாப முதலியார் சரித்திரம்

https://tamil.wiki/wiki/%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%AA_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AF%8D



https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZp6kZUy.TVA_BOK_0002656

பிரதாப முதலியார் சரித்திரம் தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல். ஆசிரியர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826- 1889). அதுவரை செய்யுள் வடிவ புனைகதை இலக்கியங்களே இருந்துகொண்டிருந்த தமிழிற்கு உரைநடை வடிவிலான புனைகதை இலக்கிய வகை இந்நூல் வழியாக அறிமுகமானது. அவ்வகையில் இது தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது. இந்நாவலின் கதாநாயகன் பிரதாப முதலியாரின் வாழ்க்கை நிகழ்வுகளை சொல்வதாக அமைந்த நாவல். பெண்விடுதலை, சமத்துவம் மற்றும் சமூக நீதி ஆகியவற்றைப் பேசும் சமூக மிகுகற்பனை படைப்பு.

உருவாக்கம்

ஆங்கிலமும் தமிழும் நன்றாகக் கற்றிருந்த மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆங்கில நாவல்களைப் படித்து அது போல தமிழில் எழுத விரும்பினார். தமிழில் உரைநடை நூல்கள் இல்லை என்ற குறையை நீக்குவதற்காக இதை எழுதுவதாக நாவலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். அதற்கு முன்னர் அவர் எழுதிய நீதி நூல், பெண்மதிமாலை, சர்வ சமய சமரசக் கீர்த்தனம் போன்ற செய்யுள் நூல்களில் எழுதியிருந்த அறநெறிக் கொள்கைகளுக்கு உதாரணங்கள் காட்டவும் பிரதாப முதலியார் சரித்திரம் எழுதுவதாகவும் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

வசன காவியம் என்றே தனது நாவலைக் குறிப்பிடும் வேதநாயகம் பிள்ளை அறநெறிக்கருத்துகளை சொல்லும் அதே நேரம் வாசகர்களின் ரசனையை ஈர்க்கும் வண்ணம் இருக்க வேண்டுமென எண்ணி நகைச்சுவைப் பகுதிகளையும் இதில் எழுதியுள்ளார்.

பதிப்பு

1857-ல் எழுதப்பட்ட இந்நாவலின் முதற்பதிப்பு 1879-ல் வெளியாகியது. இந்த நாவல் அடைந்த புகழின் காரணமாக பல பதிப்புகளும், திருத்தங்களுடன் கூடிய மறுபதிப்புகளும் வெளியாகி இருக்கின்றன. 1819-ல் மூன்றாவது பதிப்பு வெளியானது. 1914-ல் வெளிவந்த ஐந்தாம் பதிப்பில் அதன் பதிப்பாசிரியராக இருந்த வேதநாயகம் பிள்ளையின் மகன் வி. ஞானப்பிரகாசம் பிள்ளையால் முதல் முறையாக சில பிழை திருத்தங்கள் செய்யப்பட்டு ஒரு முகவுரையும் சேர்க்கப்பட்டது. 1917-ல் வெளிவந்த ஏழாம் பதிப்பு ஆயிரத்து ஐநூறு பிரதிகள் அச்சிடப்பட்டது. அதில் வேதநாயகம் பிள்ளையின் பேரர்கள் நடத்திய மாயவரத்தைச் சேர்ந்த வி. ஜி. ஆரோக்கியசாமி & ப்ரதர்ஸ் பதிப்பகம் மேலும் சில திருத்தங்கள் செய்து வெளியிட்டது.

வேதநாயகம் பிள்ளையால் அந்தக் கால இயல்புக்கேற்ற தமிழ்நடையில் எழுதப்பட்டிருந்த இந்த நாவல் 1948-ல் தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம் வெளியிட்ட பதிப்பில் வடமொழிச் சொற்கள் அனைத்தும் தமிழாக்கம் செய்யப்பட்டு முற்றிலும் மாற்றி வெளியிடப்பட்டது. இச்செயல் பின்னர் தமிழ் எழுத்தாளர்களின் கடும் கண்டனத்துக்கு உள்ளானது. க.நா. சுப்ரமணியம் இதனை 'வன்முறைச் செயல்' என்று குறிப்பிட்டு கண்டித்திருக்கிறார். இவ்விதம் ஆசிரியருக்கு இழைக்கப்பட்ட அநீதியை சீர்செய்யும் விதமாக சக்தி காரியாலயம் 1957-ல் மீண்டும் ஒரு மாற்றமில்லாத முழுப் பிரதியை வெளியிட்டது.

1979-ல் இந்நாவலின் நூற்றாண்டு நினைவு சிறப்புப் பதிப்பு வேதநாயகம் பிள்ளையின் பேரன் வே.ஞா.ச. இருதயநாதனால் பதிப்பிக்கப்பட்டது.


மொழியாக்கம்

- பிரதாப முதலியார் சரித்திரம் மீனாட்சி தியாகராஜன் மொழியாக்கத்தில் 2005-ம் ஆண்டு 'தி லைஃப் அண்ட் டைம்ஸ் ஆஃப் பிரதாப முதலியார்' என்னும் பெயரில் ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கிறது.
- பேராசிரியர் வின்செண்ட் M. லாரன்ஸ் என்பவரின் மொழியாக்கத்தில் எதிர் வெளியீடாக ஆங்கிலத்தில் 2016-ல் வெளியாகி இருக்கிறது.
- தி அட்வென்சர்ஸ் ஆஃப் ப்ரதாபன் என்ற பெயரில் அமர் சித்திரக் கதையாகவும் வெளிவந்துள்ளது. இது இந்திரா அனந்தகிருஷ்ணன்

என்பவரால் எழுதபட்ட நாவலின் சுருக்கமான தழுவல் ஆகும். இப்போதும் இது பதிப்பிக்கப்படுகிறது.

- பிரதாப முதலி - தமிழு சாகித்யத மொதலனேய காதம்பரி என்ற பெயரில் 1957-ல் மாத்தூர் கிருஷ்ணமூர்த்தி அவர்களால் கன்னடத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டது.

கதைச்சுருக்கம்




இந்நாவல் பிரதாப முதலியார் என்பவரை கதாநாயனாகக் கொண்டு அவரது தற்கூற்றாக எழுதப்பட்டுள்ளது. அவர் ஞானாம்பாள் என்பவளை திருமணம் செய்வதும் பின்னர் அவர்கள் பிரிவதும் அதன் பின்னர் எப்படி சேர்ந்தார்கள் என்பதும் இதன் கதைக்களம்.

பிரதாப முதலியாரின் குழந்தைப்பருவத்தில் இருந்து கதை துவங்குகிறது. இந்நாவலின் கதைநாயகி ஞானாம்பாள். சிறுவயது முதலே இருவரும் ஒன்றாக கல்வி கற்கிறார்கள். அவளை இளமை முதலே காதலிக்கும் பிரதாப முதலியார் அவளையே மணந்துகொள்கிறான். ஆனால் அதற்கு முன்னர் திருமணம் நிகழ்வதிலேயே பல சிக்கல்கள் வருகின்றன. திருமணத்துக்குப் பிறகு வீட்டோடு மருமகனாக இருக்க வேண்டுமென ஞானாம்பாளின் தந்தை சம்பந்த முதலியார் சொல்கிறார். அதை பிரதாப

முதலியாரின் தந்தை கனகாச்சல முதலியார் ஏற்க மறுப்பதால் திருமண ஏற்பாடு நின்று போகிறது.

பிரதாப முதலியார், ஞானாம்பாள் இருவருக்கும் வேறு இடங்களில் முறையே மணமகளும் மணமகனும் நிச்சயம் செய்யப்படுகிறது. இரண்டு குடும்பங்களுக்கும் தொடர்புடைய உறவினர் இறந்து போகவே திருமணம் மீண்டும் தடைப்படுகிறது. இரண்டு குடும்பத்தினரும் தத்தமது சம்பந்திகளுக்கு குறித்த நாள் அன்று திருமணம் நடைபெற இயலாதென கடிதம் அனுப்புகிறார்கள். ஆனால் அது இருவருக்கும் சென்று சேராமையால் அந்த இரு குடும்பங்களும் நிச்சயித்த தினத்தன்று திருமணம் நடக்க இருந்த ஊருக்கு வருகிறார்கள். சம்பந்திகளை சரியாக அறிமுகம் செய்திருக்காத நிலையில் அவ்விரு குடும்பங்களும் ஒருவரை ஒருவர் சம்பந்தி என்று எண்ணிக் கொள்கிறார்கள். பிரதாப முதலியாருக்கு பேசிய பெண்ணுக்கும் ஞானாம்பாளுக்குப் பேசிய மணமகனுக்கும் திருமணம் நடந்து விடுகிறது.



அதன் பிறகு ஒரு நாள் ஞானாம்பாளை மணக்க விரும்பிய வேறொருவர் அவளை ஆள் வைத்து கடத்த முயல்கிறார். அதிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பும் ஞானாம்பாளை பிரதாப முதலியார் மீட்டு வருகிறான். இதனால் மனம் மாறிய ஞானாம்பாளின் தந்தை பிரதாப முதலியாருக்கு அவளை மணமுடித்து வைக்கிறார். பின்னர் வேட்டை காணச் சென்ற பிரதாப முதலியார் அண்டை நாடாகிய விக்கிரமபுரியில் அநீதியான முறையில் சிலரால் வழக்குத் தொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறான். அவனைப் பிரிந்த ஞானாம்பாள் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக, ஆண் வேடமிட்டு, காட்டில் அலைந்து திரிகிறாள். இதற்கிடையில், அந்த அண்டை நாடு அரியணைக்குரிய வாரிசை இழக்கிறது. அவர்களது வழக்கப்படி, பட்டத்து யானை ஒரு புதிய அரசனை மாலையிட்டு தேர்ந்தெடுக்க வேண்டும். யானை காட்டுக்குள் அலைந்து திரிந்து

ஆண்வேடமிட்டிருந்த ஞானாம்பாளுக்கு மலர் மாலை அணிவிக்கிறது. விரைவில், அவள் அந்நாட்டின் அரசனாக அறிவிக்கப்பட்டு அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறாள்.

ஆண் வேடத்தில் அரசு புரியும் ஞானாம்பாள் தன் கணவன் அங்கு சிறைபட்டிருப்பதை அறிந்து வழக்கை விசாரித்து நியாயம் வழங்குகிறாள். பிரதாப முதலியாரை துணை அரசனாக்கி ஆண்டு வருகிறாள். அந்நாட்டின் இளவரசி (முந்தைய மன்னனின் மகள்) ஆண் வேடமிட்டிருக்கும் ஞானாம்பாளை மணக்க விரும்புகிறாள். ஞானாம்பாளும் பிரதாப முதலியாரும் இரவோடிரவாக அங்கிருந்து நீங்குகிறார்கள். தான் ஒரு பெண் என்பதை அந்த இளவரசியிடம் கடிதம் எழுதி தெரிவித்து அவளுக்கே முடிசூட்டி வைக்கிறார்கள். இருவரும் தங்கள் ஊராகிய சத்தியபுரிக்கு திரும்பும் வழியில் ஞானாம்பாளுக்கு அம்மை நோய் தாக்குகிறது. அவள் இறந்து போனதாக மருத்துவர்கள் அறிவித்துவிட அனைவரும் துயரத்துடன் ஊர் திரும்புகிறார்கள். பின்னர், அவள் இறக்கவில்லை, நோயின் கடுமையில் மயக்கம் அடைந்திருந்தவளை இறந்து போனதாக தவறாகத் தெரிவித்து விட்டதாக தெரிய வருகிறது. அனைவரும் மகிழ்சியோடு சத்தியபுரியில் வாழ்கிறார்கள்.

இதுவே மையக்கதை என்றாலும் பல்வேறு கிளைக் கதைகளோடு நாவல் பயணிக்கிறது. கற்பாலங்காரி சரிதம், கருணானந்தம்பிள்ளை மோசம்போன கதை, ஒன்பது விக்ரகங்களின் கதை, ஆண்டிச்சியம்மன் சரித்திரம், கெட்ட ஸ்த்ரீ நல்ல ஸ்த்ரீ உதாரணக் கதைகள், இரண்டுதாரக்காரன் பாடு, புண்ணியகோடிச் செட்டியார் சரித்திரம் போன்ற துணைக்கதைகள் இதிலுள்ளன.

கதைமாந்தர்

- பிரதாப முதலியார் - கதைநாயகன். ஞானாம்பாளின் இளமைக்காதலன், கணவன்.
- ஞானாம்பாள்- கதைநாயகி. அழகும், அடக்கமும், அறிவும், கொடையும், பெருந்தன்மையும், இனிமையாகப் பேசும் இயல்பும், சொற்சாதுர்யமும் நிறைந்த பெண். கணவனை நேசிப்பவள். மாறுவேடத்தில் ஒரு நாட்டையே நிர்வகிக்கும் திறன் கொண்டவள்.
- சுந்தரத்தண்ணி - பிரதாப முதலியாரின் அம்மா. ஞானம் உடையவள். ஆண்களுக்கு அறிவுரை கூறும் ஆற்றல்

கொண்டவள். அவளது துணிவையும் வழக்காடும் திறனையும் சென்னை கவர்னரே பாராட்டுகிறார்.

- கனகாச்சல முதலியார் - பிரதாப முதலியாரின் தந்தை. செல்வந்தராயினும் பொறுமை மிக்கவர்.
- சம்பந்த முதலியார் - ஞானாம்பாளின் தந்தை. செல்வத்தின் மீது மிகுந்த நாட்டம் கொண்டவர். ஞானாம்பாளால் மாற்றம் அடைகிறார்.
- கனகசபை - பிரதாப முதலியாரின் நண்பன்.
- தேவராஜ பிள்ளை - ஆதியூரின் தலைவர். கனகசபையின் தந்தை. அறிவார்ந்தவர், பிரதாப முதலியார்-ஞானம்பாள் இருவருக்கும் பல விதங்களில் உதவுபவர்.

மதிப்பீடு

பெங்களூரில் இருந்து வெளியாகிக் கொண்டிருந்த "தி ஹார்வெஸ்ட் ஃபீல்ட்" என்னும் இதழ் மார்ச் 1886 இதழில் "இந்தப் புத்தகம் தமிழ் சிந்தனை மற்றும் இலக்கியத்தில் தெளிவான முன்னேற்றத்தின் ஒரு அறிகுறியாகும். ஏனெனில் இதில் இடம்பெறும் தமிழ் பேச்சில் மேற்கத்திய சிந்தனைப் போக்கு இடம்பெறுகிறது. இது சிறந்த குடும்பப் பாங்கான புத்தகம் மற்றும் நன்கு திட்டமிட்டு எழுதப்பட்டுள்ளது" என்று இந்நாவல் வந்த காலகட்டத்தில் மதிப்புரை வெளியாகியது.

"பிரதாபமுதலியாரின் நகைச்சுவை நிறைந்த அனுபவங்களுக்கிடையே ஆன்மிக அறிவுரைகளை வேதநாயகம் பிள்ளை ஆங்காங்கே இணைத்திருப்பது அவருடைய கதைசொல்லும் திறனுக்கு தனிச்சிறப்பளிக்கிறது' என்று தமிழ்நாவல் நூலில் சிட்டி-சிவபாதசுந்தரம் கருத்துரைக்கிறார்கள்.

இந்நாவல் நீண்ட வாக்கிய அமைப்புகளும், ஏராளமான உருவகங்களும், பழமொழிகளும், அணிகளும் கொண்ட நடையில் அமைந்தது. அக்காலகட்டத்தில் புழங்கிய வடமொழிச் சொற்கள் அதிகம் புழங்கும் தமிழ் நடையில் எழுதப்பட்டது. பிரதாப முதலியார் சரித்திரம் விரிவான புறச்சூழல் சித்தரிப்பும், கதைமாந்தரின் இயல்புகளில் நுட்பமும் கொண்டது அல்ல. ஆரம்பகாலக் கதைகள் பலவற்றில் வருவது போல நிகழ்வுகள் நம்ப முடியாத அசாதாரணத் தன்மை கொண்டிருக்கின்றன. கதாபாத்திரங்கள் பலர் நீதி உபதேசக் கருத்துக்களையும், நீதிக்கதைகளையும் சொல்கிறார்கள். பல இடங்களில் நீதிக் கருத்துக்கள் கட்டுரைகள் போல தொடர்பின்றி ஆசிரியரின் குரலாக

இடம்பெறுகின்றன. இன்னும் சில கதாபாத்திரங்கள் அதற்கென்றே கதையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பிரதாப முதலியாரின் ஆசிரியராக வரும் கனகானந்த பிள்ளை பல மூடவழக்கங்களுக்கு எதிரான கருத்துக்களை சொல்வதற்காகவே வரும் கதாபாத்திரமாக தோன்றுகிறது. மையக்கதை ஓட்டத்திலிருந்து விலகி பல உபகதைகளும் நாவலில் வருகின்றன.

இந்நாவலின் வழியாக அன்றிருந்த சமூக அரசியல் நிலைமைகளை ஒரளவு அறிந்து கொள்ள முடிகிறது. கதை நிகழும் காலகட்டம் முகலாய அரசு முடிவடைந்து ஆங்கிலேய அரசு காலூன்றிவிட்ட காலகட்டம். அதனால் இஸ்லாமிய அரசர்களின் கீழ் திவான்களாக இருந்து செல்வந்தர்களாக ஆகியவர்களின் குடும்பங்கள், பாளையப்பட்டு ஆட்சியாளர்களின் கதைகள் இதில் வருகின்றன. 1848-ல் இருந்து 1856 வரை ஆளுநராக இருந்த டல்ஹௌசி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்ட வாரிசு இழப்புக் கொள்கை (Doctrine of Lapse) ஆண் வாரிசின்றிப் போகும் நாடுகளில் ஆண் குழந்தைகள் தத்தெடுக்கப்படுவது ஏற்கப்படவில்லை என்பதன் பாதிப்பும் இந்த நாவலில் வருகிறது. சமுதாயத்தில் ஆங்கிலத்தின் மீது உருவாகி பெருகி வரும் மோகமும் தமிழறிஞர்களை ஆங்கிலம் கற்றவர்கள் ஏளனமாகப் பார்ப்பதன் சித்திரமும் வருகின்றன. மேலை கலாச்சாரத்தின் மீது பெரும் பற்று கொண்டு மக்கள் நாத்திகவாதம் பேசத் துவங்குவதும் வருகிறது. பாளையப்பட்டு ஆட்சியாளர் குடும்பத்தில் வாரிசுகளுக்குத் திருமணம் நிச்சயம் ஆனால் ஆங்கிலேய ஆட்சியாளர் அனுமதி பெற வேண்டும் என்பது போன்ற தகவல்களை இக்கதையில் காண முடிகிறது. மேலும் அன்று பிரிட்டிஷார் உருவாக்கியிருந்த நீதிமன்ற நடைமுறையில் நிலவிய ஊழல்கள் ஆகியவையும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

பெண் கல்விக்கும் சுதந்திரத்துக்கும் அளித்த முக்கியத்துவம், ஆணுக்கு இணையான நிர்வகிக்கும் திறனும் சொற்சாதுர்யமும் கொண்ட பெண் கதைமாந்தர் சித்தரிப்புகள் ஆகியவற்றால் இந்நாவல் முக்கியமானதாக ஆகிறது. வடிவரீதியாக இது இந்திய கதைக்கொத்துகளான பட்டிவிக்ரமார்க்கன் கதை போன்றவற்றுக்கு அணுக்கமானது. அக்காலத்தில் இந்த வடிவம் நாவலுக்கு புறம்பானது என விமர்சகர்களால் கருதப்பட்டாலும் இன்று நாவல் என்பது ஒற்றை ஒழுக்குள்ள கதையாக இருக்கவேண்டியதில்லை என்றும், கிளைகளாகவும் குறுங்கதைகளாகவும் விரிந்து செல்லும் வடிவம் நாவலுக்கு உகந்ததே என்றும் ஆகிவிட்டிருப்பதனால் இந்நாவல் வடிவரீதியாகவும் முன்னோடியானது எனலாம். இந்தியாவின் மரபான கதைத்தொகை வடிவங்களில் இருந்து இந்தியத்தன்மை கொண்ட ஒரு நாவலை உருவாக்குவதற்கு இது வழிகாட்டுகிறது.



சுகுணசுந்தரி (1887) என்பது மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய இரண்டாவது நாவலாகும், இது பிரதாப முதலியார் சரித்திரத்திற்குப் பிறகு வெளிவந்தது. இது 'புவனசேகரம்' என்னும் கற்பனை ஊரைச் சேர்ந்த நராதிபன் என்பவரின் மகள் சுகுணசுந்தரியின் வரலாற்றுக் கற்பனைக் கதையை விவரிக்கிறது. இந்த நூல் சமூக நாவல் வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** மாயூரம் வேதநாயகம் பிள்ளை.
- **வகை:** நாவல் (வரலாற்றுக் கற்பனை).
- **பொருள்:** நராதிபனின் மகள் சுகுணசுந்தரியின் கதை.
- **கதைக்களம்:**


  புவனசேகரம்.
- **வெளியீடு:** 1887-இல் எழுதப்பட்ட இது, பின்னர் பல பதிப்புகளைக் கண்டுள்ளது (எ.கா., 1957, 1979).

இக்கதையில், சுகுணசுந்தரி சிறந்த கல்வி மற்றும் தர்மங்களைப் பயின்று ஞானச் செறிவோடு திகழ்வதாக விவரிக்கப்பட்டுள்ளது.

https://archive.org/details/SugunasundariSarithiramMayuramVedanayagamPillai1950

சுகுணசுந்தரி

https://tamil.wiki/wiki/%E0%AE%9A%E0%AF%81%E0%AE%95%E0%AF%81%E0%AE%A3%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%BF



சுகுணசுந்தரி (1887) (சுகுணசுந்தரி சரித்திரம்) மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய இரண்டாவது நாவல். பிரதாப முதலியார் சரித்திரத்துக்குப் பிறகு வேதநாயகம்பிள்ளை எழுதிய இரண்டாவது நாவல் இது. இது ஒரு வரலாற்றுக் கற்பனை நாவல். புவனசேகரம் என்னும் கற்பனை ஊரில் நிகழும் கதை. அந்நகரத்தின் தலைவர் நராதிபனின் மகள் சுகுணசுந்தரி கதைநாயகி.

எழுத்து,பிரசுரம்

பிரதாப முதலியார் சரித்திரத்துக் கிடைத்த வரவேற்பைக் கண்டு இந்நாவலை எழுதியதாக வேதநாயகம்பிள்ளை முன்னுரையில் சொல்கிறார். இது பிரதாப முதலியார் சரித்திரத்தின் கிளைக்கதைகளில் ஒன்றாக யோசிக்கப்பட்டிருக்கலாம் என்றும் நீளம் காரணமாக தனிநூலாக ஆகியிருக்கலாம் என்றும் சிட்டி சிவபாதசுந்தரம் அவர்களின் தமிழ்நாவல் நூலில் சொல்கிறார். 1887-ல் வேதநாயகம் பிள்ளை இந்நாவலை வெளியிட்டார்.

கதைச்சுருக்கம்

நராதிபன் என்னும் அரசன் புவனசேகரம் என்னும் ஊரை ஆள்கிறான். அவன் மகள் சுகுணசுந்தரி. அங்கே ஓர் அனாதைக்குழந்தை கொண்டுவரப்படுகிறது. அது ஓர் இளவரசன் என்றும், அவனைக் கொல்ல சிலர் தேடுவதாகவும் சொல்லப்படுகிறது.அவனுக்கு புவனேந்திரன் என பெயரிடப்படுகிறது. சுகுணசுந்தரி, புவனேந்திரன் இருவரும் சேர்ந்து கல்விகற்கிறார்கள். உடன் நராதிபனின் அமைச்சரின் மகன் மதுரேசனும் கல்வி பயில்கிறான்.அவன் கெட்டவன். புவனசேகரத்தில் பஞ்சம் வருகிறது. சாலைகள் சேதமடைந்துவிடுவதனால் உணவுப்பொருட்கள் பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் மாபெரும் பலூன்களில் எடுத்துச்செல்லப்படுகின்றன. ஒரு பலூனில் ஏறி தந்தையை

காணச்செல்லும் சுகுணசுந்தரி கடத்தப்படுகிறாள். அவளை கொல்ல முயற்சி நடக்கிறது. அவள் உயிர்தப்பி ஒரு பிரெஞ்சு கத்தோலிக்கக் கன்னிமாடத்தில் அடைக்கலம் புகுகிறாள். அமைச்சர் தன் அரசர் புவனேந்திரனைக் கொல்ல சதிசெய்கிறார். தப்பிச்செல்லும் புவனேந்திரன் கன்னிமாடம் சென்று சுகுணசுந்தரியை விடுவிக்கிறான். அங்கே அவன் தன் திறமையால் அமைச்சர் ஆகிறான். அமைச்சரின் சூழ்ச்சிகளை முறியடித்து புவனசேகரத்தை கைப்பற்றி சுகுணசுந்தரியை புவனேந்திரன் மணக்கிறான். புவனேந்திரன் ஆரியதேசம் என்னும் நாட்டின் இளவரசன் என தெரியவருகிறது.

இலக்கிய இடம்

சுகுணசுந்தரி கதை பின்னாளில் தமிழில் பொதுவாசிப்புக்கான வரலாற்றுப் புனைவுகள் உருவாக முன்னோடியாக அமைந்தது. பெண்கல்வி போன்ற கருத்துக்கள் நாவலில் பேசப்படுகின்றன.

காணொளிகள்

01] Story of Mayuram Vedanayagam Pillai
https://www.youtube.com/watch?v=TakIgW8j7cU [13:42]
02] மாயூரம் வேதநாயகம் பிள்ளை
https://www.youtube.com/watch?v=vnjg7LjDMKA [25:00]
03] மயூரம் வேதநாயகம் பிள்ளை வாழ்க்கைக் குறிப்பு
https://www.youtube.com/watch?v=5XnwIJsZvYo [6:43]
04] அமரர்.திரு.மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் பிரதாப முதலியார் சரித்திரம் குறித்த பார்வை
https://www.youtube.com/watch?v=KZB0kqqHAU4 [12:40]

(😊)(😊) @@@@@@@@@@@@@ (😊)(😊)